அன்பளிப்பு 40P

களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 19-11-1993

மாவீரர் நினைவாக அஞ்சலி ஆக்கங்கள் உள்ளே ஒளிவீசுகின்றன.

மாவீரர் மாதத்தின் இறுதிநாளான கார்த்திகை 27, மாவீரர் தினமாகவும், தமிழீழத்தின் தேசியத் தின மாகவும் இருப்பதனால், உலகெல்லாம் வாழும் தமி ழினத்திற்கு அந்த நாள் புனித நாள் என்பதை ஏற்று, மாவீரரை வணங்குகின்றோம்; தேசியக் கொடிக்கு தலை தாழ்த்துகின்றோம்; தேசத்தை மீட்க உறுதி பூணுகின்றோம்.

பூநகரி இராணுவ, கடற்படை முகாம் தகர்ப்பு

சிறீலங்கா, அரசியல்தீர்வின் அவசியத்தை உணர்கிறது

☆ இருபது வருடங்களுள் நடந்த பேரழிவு, பேரிழப்பு

☆ எடுத்த ஆயுதத்தால் வந்த இராணுவ, விமானத்தளத்தையும் புலிகள் தாக்கலாமென அச்சம்

– சிறீலங்கா பாதுகாப்பமைச்ச

☆ புலிகள், மரபு ரீதியான இராணுவமாக பரிணமிக்கின்ற, ஒழுக்கத்தில் சிறந்த படையணி

☆ இராணுவ வலிமையும் தெளிவான நோக்குமுள்ள புலிகள்முன் இராணுவத்தீர்வு சாத்தியமல்ல

– ஜேம்ஸ் மேனர் (பொதுநலநாடுகள் படிப்பக இயக்குனர்)

கிளாலி கடலேரிப் போக்குவரத்தைத் தடைசெய்யும் நோக்கில் நிறுவப்பட்ட சிறீலங்கா இராணுவத்தின் பலம் மிகு இராணுவ தளங்களுள் ஒன்றான பூநகரி தளமும், கடற்படைத்தளமான நாகதேவன் துறையும் தமிழீழ விடுதலைப்புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளன. ஏழு மணி நேரமாக நடந்த சண்டையின் பின்னர், சிறீலங்காவின் 1,500 படையினரைக் கொண்டிருந்த இத் தளங்கள் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தன. இம் முகாமில் சிறீலங்காவின் "ஆமட்கோ பிரிஜ்" எனப்படும் கவச அணியும் நிலை கொண்டிருந்தது. நவீன ராடர் நிலையத்துடன் கூடிய இத் தளத்தில் அதிசக்தி வாய்ந்த 'கோட்டர்ஜெட்' படகுகளும் சிறீலங்காவின் 'கஜபா' கடற்படை அணியைச்சேர்ந்த முதலாம் தரப் படைப்பிரிவினரும் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர். இவற்றின் பாதுகாப்புக் கருதி பத்து கிலோ மீற்றர் கற்று வட்டாரத்திற்கு பல காவல் வினை முகாம்களும் அமைக்கப் பட்டிருந்தன. இத்தகைய இராணுவ பலத்துடன் திகழ்ந்த பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை (11-11-93) அதிகாலை இரண்டு மணியளவில் கடலேரி வழியாக நுழைந்த புலிகள், தமது மயிர்கூச்செறியும் துணிகரத் தாக்குதலைத் தொடங்கினர். சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படைப்பிரிவினர், மகளிர் படைப் பிரிவினர், கடற்புலிகள் உட்பட தமிழீழ விடுதலைப்புலிகளின் அணி, எந்த எதிர்ப்பையும் சமாளிக்கும் தேச உணர்வுடன் வேகமாகத் தாக்குதலைத் தொடுத்தனர். தமிழீழ மண் அதிர்ந்தது. தமிழீழ விண் அதிர்ந்தது. தமிழீழப் பகைவர்கள் எங்கோ ஓடி மறைத்தனர். சிறீலங்கா 700ற்கும் மேற்பட்ட படையினரின் இழப்புக்களை ஆளானது. காட்டுக்குள் கரந்து ஒளிந்த சிறீலங்காப் படையினரை முற்றுகையிட்ட விடுதலைப்புலி அணியினர், முகாம்களில் இருந்து 30 கோடி ரூபா பெறுமதியான நவீன ஆயுதங்களையும் தமதாக்கி, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத வலிமையையும், தாக்கு திறனையும் பல மடங்காகப் பெருக்கிக் கொண்டனர்.

சிறீலங்கா பாதுகாப்பு அமைச்ச அதிர்ச்சி


வாழ்தேவி நடவடிக்கை மூலம் கிளாலிப் பாதையைத் தடை செய்து, இராணுவ நெருக்குதல் வழியாக நுழைந்த புலிகள், வால் இராணுவத்தீர்வு கண்டு விடலாம் எனத் துடித்த சிறீலங்கா இராணுவத்திற்கும் சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சிற்கும் வாழ்தேவி படு தோல்வி அளித்த திகைப்பு அடங்கும் முன்னரே பூநகரி இராணுவ கடற்படைத் தளம் பாரிய அதிர்ச்சியை அளித்துள்ளது. சிறீலங்காப் பாதுகாப்புப் படைகளின் வரலாற்றில் இது மிகப் பெரும் தோல்வி என்பதை ஏற்றுக் கொண்ட இராணுவ பேச்சாளர் ஒருவர் "கடந்த இரண்டு வருடங்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றியுள்ள அதிநவீன ஆயுதங்களை அவர்கள் திரும்பவும் சிறீலங்காப் படைகளுக்கெதிராகப் பயன்படுத்தலாம். இதனால் எந்த நேரத்திலும் எந்த இராணுவ -கடற்படை -விமானத் தளமும் இனித் தாக்குதலுக்குள்ளாகும் அச்சம் ஏற்பட்டுள்ளது" எனக் கூறினார். பாராளுமன்றத்தில் சிறீலங்காவின் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா, "விமானங்கள் மூலமும் தாக்குதல் நடத்த முடியாது உள்ளது எமது படையினரிடமிருந்து புலிகளால் பறிக்கப்பட்ட ஆயுதங்கள், எமக்கு எதிராக நன்கு பயன்படுத்தப் பட்டு வருகின்றன" என்று அலட்டிக்கொண்டார்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....



எமது நேசத்தின் எதிர்காலத்தை எழுதிக் காட்டிய தேசியத் தலைவனே! உனது சகாப்தத்தில் நாமும் வாழ்ந்தோம் என்ற உணர்வு எம்மை உற்சாகப்படுத்துகிறது. உன்னால் உலகத் தமிழினம் தலை நிமிர்கிறது. நீ வாழி! உன புகழ் வாழி!

(தேசியத் தலைவரின் பிறந்த தினம் கார்த்திகை 26.)



'வாழ்தேவி' இராணுவ நடவடிக்கையின் போது புலோப்பளையில் தாக்கி அழிக்கப்பட்ட T-55 ரக தாங்கி பூநகரி இராணுவத் தளம் மீதான தாக்குதலின் போதும் இந்த ரக தாங்கி ஒன்றும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டது

விடுதலைப் புலிகளுக்கு தொடர் வெற்றிகள் சிறீலங்காவுக்கு அடுக்கடுக்காகத் தோல்விகள்

தமிழீழ விடுதலைப் புலிகள் கிளாலிப் பாதையைத் தொடர்ந்து பாதுகாப்பதாக பூநகரியில் அமைத்திருந்த சிறீலங்காவின் இராணுவ கடற்படைத் தளங்களை தாக்கியழித்து திட்டமிட்டபடி இவ் இராணுவ நடவடிக்கை திட்டமிடப்பட்டபடி மூன்று நாட்களில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டதால், நான்காம் நாள் விடுதலைப் புலிகள் அப்பகுதியிலிருந்து கைப்பற்றிய பெருந்தொகை ஆயுதங்களுடன் தமது தளங்களுக்கு மீண்டனர். இந்த பூநகரி நாகதேவன்துறை இராணுவத் தளங்களைப் பயன்படுத்தி கிளாலிக் கடலேரியின் மீதும், மக்கள் குடியிருப்புக்கள் மீதும் எறிகணைகளை, சிறீலங்கா படைகள் ஏவியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு இத்தகு முன் நடவடிக்கைகளை மேன்மேலும் மேன்மைப்படுத்தி சிறீலங்காவின் இராணுவ மற்றும் விமானத் தளங்களையும் ஒழுங்கு செய்வதற்கும், மணலாற்றில் நடைபெறும் ஆயுதப்பயிற்சிகளை அடுத்தடுத்து மேற்கொள்வதற்கும் மிகத் தேவையான இந்த நவீன ஆயுதங்களை விடுதலைப் புலிகள் பெற்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறீலங்கா அரசாங்கமோ, கிளாலிக் கடலேரியைத் தேவையற்ற முறையில் போக்குவரத்திற்கு தடைசெய்த நாள் முதல் எந்த வகையான வழிமுறைகளில் பல உலகங்களை விளாவிப் பிரதேசத்தை யுத்தமயமாக்கியது இவை அனைத்தும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டன.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



அமைதிக்கும் யுத்தம்

"யுத்தமென்பது அரசியலின் நீடிப்பாக மாறினால், இராணுவக் கலாச்சாரம் என்பது அரசியல் கலாச்சாரத்தின் நீடிப்பாகிவிடும்" என்ற வசனம் தான் சிறீலங்கா ஜனாதிபதியின் செயற்பாடுகளைப் பார்க்கையில் நினைவுக்கு வருகிறது. "தீவில் காணப்படுவது பயங்கரவாதப் பிரச்சினைதான்" என யுத்தத்தைப் பிரகடனப் படுத்துவதற்காகப் பலமுறை மேடைப் பிரசங்கங்கள் செய்து அவர், இறுதியில் யாழ்தேவி நடவடிக்கை என்ற இராணுவ நடவடிக்கையைத் தனது படையினரைக் கொண்டு நடாத்தினார். "நீங்கள் யுத்தத்தில் ஆர்வமில்லாதிருக்கலாம், ஆனால் யுத்தம் உங்கள் மேல் ஆவலாக இருக்கின்றது" என டிரொட்ஸ்கி கூறியதுபோல், சிறீலங்கா ஜனாதிபதி தமிழீழ மக்களைப் பார்த்து சொல்லிலும் செயலிலும் யுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தார்.

எவ்வாறு சிங்கள பௌத்த பேரினவாத மேலாண்மையை மையமாகக் கொண்ட இன அழிப்பு நடவடிக்கைகளால், அதிமிசை மேலும் ஜனநாயகத்தின் மேலும் நம்பிக்கை வைத்து வாழ்ந்த தமினிமம், ஆயுத எதிர்ப்பை வேறு வழியின்றி ஏற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதோ, அதே போல் இன்றும் தனது தற்காலிக ஜனாதிபதிப் பதவியைத் தக்கவைப்பதற்காக, பௌத்த சிங்கள பேரினவாத வெறி கொன்றே, சிங்களத் தலைமையின் சிந்தனை ஒட்டமாக என்றும் இருக்கும் என்பதை உறுதி செய்வது போல், பயங்கரவாதப் பிரச்சினையாக தமிழர் பிரச்சினையை மாற்றினார் சிறீலங்கா ஜனாதிபதி. இதன் மூலம் தொடர் நிலை யுத்த சூழலை தமிழர் தாயகப் பூமியில் தோற்றுவித்தார் சிறீலங்கா ஜனாதிபதி. அமைதிக்கும் சர்வதேச சமூகத்திற்கும் மதிப்பளிக்கும் வகையில் தாயக முழுமை, அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி முறை முன்வைக்கப்பட்டால் அதனைப் பரிசீலிக்கத் தயாரென தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள், வெளிப்படையாக அறிவித்தும் கூட சிறீலங்கா ஆட்சியாளர்கள் அரசியல் தீர்வுபற்றி அக்கறைகாட்ட மறுத்தனர். மாறாக இராணுவ நடவடிக்கைகள், முற்றுகைகள், பொருளாதாரத் தடைகள் மூலம் தமிழரின் வாழ்வையும், உயிர்களையும் உடமைகளையும் அழித்து வருகின்றனர்.

இந்நிலையில் அமைதிக்கும் யுத்தம்தான் தேவை என்ற உண்மை, தமிழர்களால் உணரப்படுகிறது. மனித உரிமைகூட சக்தியின் சார்பு நிலையாகிவிட்டது. எனவே தலைவர் பிரபாகரன் அடிக்கடி கூறுவதுபோல், 'யுத்தம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுகிறது'. அன்று 1990ல் தீபாவளிப் பண்டிகையின்போது தமிழ்மக்கள் மேல் யுத்தத்தைத் திணித்த சிறீலங்காப் பாதுகாப்பு அமைச்சர், "தமிழர்களின் தீபாவளிப் பண்டிகைக்காக நாம் பட்டாக கொளுத்தினோம்" எனக் கிண்டல் செய்தார். ஆனால் இன்று மூன்று வருடங்களின் பின் தமிழர்கள் தங்கள் தீபாவளிப் பண்டிகைக்கு முன், தாங்களே நாரகர்களை அழிக்கப் புறப்பட்டனர். அதன் விளைவுதான் பூநகரி, நாகதேவன்துறை இராணுவக் கட்டமைப்புக்கள் இருந்த இடம் தெரியாமல், சிங்களப் படைகளின் மனோதைரியம் காட்சியளித்தது. இத்தாக்குதல் பலவழிகளில் முக்கியத்துவம் பெறுகிறது.

1) சிறீலங்கா அரசாங்கம் சர்வதேச யுத்த விதிகளுக்கு மாறாக தமிழீழ மக்கள் மேல் முற்றுமுழுதாக யுத்தம் நடாத்துவதற்காக, தரைவழிப் போக்குவரத்தைத் தடை செய்ததுமல்லாமல், கடல்வழி வினாலிப் போக்குவரத்தையும் தடை செய்யத் துடிக்கிறது. இதனை உடைத்து மக்கள் மேலான முற்றுகையை தொற்க்குவதற்கு, தமிழீழத் தேசியப் பாதுகாப்புக்குப் பொறுப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் நாகதேவன் -பூநகரி கடற்படை, இராணுவத்தளங்களைத் தாக்கியழித்தனர். சர்வதேச சட்டப்படி யுத்தத்தைத் தமதாக தெரிந்து கொள்ளாதவர்கள் மேல், மரணத்தையும் உடல் உடமைச் சேதங்களையும் விளைவிப்பது யுத்தக் குற்றம். இந்த நாகதேவன்-பூநகரித் தளங்களிலிருந்தே பயணிகள் மீதும், பொதுமக்கள் மீதும், அவர்களது உடமைகள் மீதும் ஆயுதப் பிரயோகம் செய்து அவர்களது உடமைகளையும், உயிர்களையும், உடல்களையும் சிறீலங்காப் படைகள் அழித்து வந்தன. ஆகவே இத்தக் கொலைத் தளங்களின் மீது, தமிழீழ அரசு நோக்கிய அரசின் (DefactoGoverment) பொறுப்பாளர்களான தமிழீழ விடுதலைப் புலிகள் தற்காதுகாப்பு யுத்தம் நடாத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தப் பூநகரி- நாகதேவன் தளங்கள் சிறீலங்காப் படைகளினால் ஆக்கிரமிப்பு முறையினால் மண்டைதீவிலிருந்து கடலாலும் வானாலும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்கள். சிறீலங்காவால் தரை நகர்வு மூலம் ஆக்கிரமிப்பைச் செய்து அதைத் தக்க வைத்துக் கொள்ள முடியாதென்பதற்கு, இத்தத் தளங்களின் சரிவு மிகச் சிறந்த உதாரணங்கள் ஆகின்றன.

ஒரு யுத்தம் முடிவு நிலைக்குச் செல்லுகின்றதென்பதை, எதிரியைத் தூக்கி எறிவது (Overthrow of the enemy) காட்டும் என்று கூறுவர். மண்கிண்டிமலை-யாழ்தேவி நடவடிக்கை -நாகதேவன்துறை - பூநகரி என எடுத்துக் நோக்கின், இம்மெல்லாம் எதிரிகள் எவ்வளவு இலகுவாக தமிழீழத் தேசிய இராணுவமாகிய விடுதலைப் புலிகளால் தூக்கியெறியப்பட்டார்கள் என்பதை உலகு அறியும். அத்துடன், நிலக்கண்ணிகளால் தரை நகர்வு செய்ய முடியாது நாலைந்து முகாம்களை கடல் வழி கடற்படைத்துணையுடன் இயக்கிவந்த சிறீலங்கா இப்பொழுது, கடல் வழி கடற்புலிகளினால் அடைக்கப்படுவதை இத்தாக்குதல்களால் நன்குணர்கிறது. அவ்வாறே பெண்ணைப் பலவீனமானவளாகக் கருதி, இன அழிப்பினதும் இராணுவ வெறித்தனங்களினதும் இலக்காக அவளை வைத்தே தமினிமத்தை மானபங்கம் செய்த சிறீலங்கா இன்று, அதே தமிழ்ப் பெண்ணிடம் உதை வாங்குவதை சகிக்கமுடியாது விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு காட்டுகின்றது. இவைகளை எல்லாம் எடுத்து நோக்கின், யுத்தம் தமிழர்களின் மேல் திணிக்கப்படும்போது அதையும் எதிர்கொண்டு வெல்ல அவர்கள் தயாராகி விட்டார்கள் என்பது நன்கு தெளிவாகிறது.

இந்த சக்தியைப் பெற, தங்களையே சக்தியாக மாற்றிய மாவீரர்களின் மாதமிது. இம் மாவீரர் மாதத்தில் மேலும் நூற்றுக்கணக்கான மாவீரத் தெய்வங்கள் தோன்றக் காண்கிறோம். இவர்களனைவெல்லாம் இந்தக் கட்டுரையின் ஊடாக தோற்றங்களனைவெல்லாம் இருகரம் கூப்பித் தொழுது விழவணக்கம் செய்கிறோம். ■

நிவாரணத்தை அரைவாசியாக்கியதால்

மடு, பாலம்பிட்டியில் இருந்து யூ.என்.எச்.சி.ஆர். வெளியேற்றம்

- சிறீலங்காவால் 32,000 அகதிகள் பாதிப்பு

சிறீலங்கா அரசு அகதிகளுக்கான நிவாரணத்தை அரைப்பங்காக (50%) குறைந்துக் கொண்டதால் மடு, பாலம்பிட்டி அகதி முகாம்களில் கடமையாற்றிய ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் (யூ.என்.எச்.சி.ஆர்.) நிறுவன அலுவலகர்கள் தமது சேவைகளை இடைநிறுத்திக் கொண்டு வடக்கிலிருந்து வெளியேறியுள்ளனர். இதனால் 32,000 அகதிகள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

1990 கார்த்திகை மாதம் முதல் மடு அகதி முகாமிலும், 1992 புரட்டாசி முதல் பாலம்பிட்டி அகதி முகாமிலும் யூ.என்.எச்.சி.ஆர். தனது பணிகளைச் செய்ய தமிழீழ விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கினர்.

ஆயினும், சிறீலங்கா அரசு இம் முகாம்களுக்கு வழங்கி வந்த நிவாரண உதவிகளை 50% ஆல் குறைத்ததை அடுத்து ஏற்பட்ட பற்றாக்குறைகளால் அகதிகளுக்கிடை அமைதியின்மை ஏற்படத் தொடங்கியது. கடந்த ஆவணி மாதம் முதல் அகதிகள், தொடர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு தமது மனவேதனைகளையும் தேவைகளின் அவசியத்தையும் வெளிப்படுத்தி வந்தனர். கடந்த ஐப்பசி 30 இல் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் மேற் கொண்ட ஆரவாது ஆர்ப்பாட்டத்தில் யூ.என்.எச்.சி.ஆர். ஊழியர்களும் அகதிகள் தடுத்து வைத்து முற்றுகைப் போராட்டம் நடத்தியதாகவும் ஆயினும் விடுதலைப் புலிகளின் தலையீட்டால் அவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறீலங்கா அரசு மேற்படி நிவாரண உதவிகளை வழங்க மறுக்கும் நிலையில் இப்பகுதிகளில் கடமையாற்றும் யூ.என்.எச்.சி.ஆர். ஊழியர்கள் அகதிகளின் உணர்ச்சிகளுக்கு இலக்காகக் கூடும் எனும் அச்சத்தில் யூ.என்.எச்.சி.ஆர். தனது பணிகளை இடைநிறுத்திக் கொண்டு வெளியேறுகின்றது ஆனால் அதேவேளை யூ.என்.எச்.சி.ஆர் சிறீலங்கா அரசு அகதிகளுக்கு இழைத்துவரும் அரசினை நேரடியாக வெளிப்படுத்தாமல் விலகிச் செல்வது யூ.என்.எச்.சி.ஆரின் நேர்மைத் தன்மைக்கு இழுக்கு என அகதிகள் பிரதிநிதி ஒருவர் வேதனையுடன் கருத்து வெளியிட்டுள்ளார். யூ.என்.எச்.சி.ஆர் ஒரு சர்வதேச நிறுவனமாக இருந்தும்கூட தமிழ் அகதிகளின் உண்மை நிலையை உலகிற்கு சரிவர உணர்த்தத் தவறியிருப்பது என்ற கருத்து உலகெங்கும் வாழ் தமிழரிடமும், உலகெங்கும் நலன்விரும்பும் மனிதாபிமான உரிமை இயக்கங்களிடமும் நிலவி வருகின்றது. ■

பாராளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கை

தமிழர் பிரச்சினையை திசைதிருப்பும் சதி

இன்று இலங்கைத் தீவில் வாழும் தமிழர்களின் பிரச்சினை என்பது, சிறுபான்மை இனப்பிரச்சினையல்ல (Minority problem) என்ற உண்மையை உலகிற்கு அரசியல் விஞ்ஞானிகளும் அரசியல் விமர்சகர்களும் Terrorism வரையும் கொண்டுள்ளனர். அத்துடன் உலகில் அரசு அற்ற மக்கள் (nation without state) என்பதற்கு உதாரணமாகத் தமிழ் மக்களைக் கூறலாம் என முரண்பாட்டுத் தீர்வு பற்றிய பேராசிரியர், அன்ரூ ரிட்ஜ்பே, தென்னாசியத் துறைப் பேராசிரியர் கீவிட் மேன் போன்ற பல ஆய்வாளர்கள் கட்டிக்காட்டி வருகின்றனர். இவ்வாறு சர்வதேச சமூகம், தமிழ்த் தேசியத்தையும், தமிழ்த் தேசிய இனங்களையும் மக்களையும், அங்கீகரிக்கத் தொடங்கியுள்ளமை சிறீலங்கா அரசின் பௌத்த சிங்கள மேலாண்மை வெறிக்குச் சவாலாக மாறியுள்ளது. இதனால் தமிழர்களின் பிரச்சினையை வெறும் சிறுபான்மை பிரச்சினையாக, உள்நாட்டுப் பிரச்சினையாக மட்டும் மாற்றிவிட நரித் தந்திர வேலைகளில் ஈடுபட்டு வருகின்றது.

இதுவரை காலமும் சிறீலங்கா அரசாங்கம், இலங்கைத் தீவின் தேசிய இனங்களின் முரண்பாட்டுக்குத் தீர்வுகாணவென தாம் நியமித்ததாகக் கூறிய பாராளுமன்றத் தெரிவுக்குழு, மூன்று வருட பிரேரணை வேதனைக்குப் பின்னர், முற்றிலும் பௌத்த சிங்கள மேலாண்மை வடிவான தீர்வொன்றைப் பெற்றெடுத்து சிறீலங்காப் பாராளுமன்றத்திற்குக் கொடுத்துள்ளது.

1) வடக்குக்கும் கிழக்குக்கும் இரண்டு தனித்தனியான அலகுகளைக் கொண்ட இரண்டு வெவ்வேறான சபைகள்.

2)அதிகாரப் பரவலாக்கம்: இத்தீர்வுப் பாணியிலான முறையில் செயற்பட வேண்டும். வேறு வார்த்தையில் சொன்னால், பெரும்பாலும் சமஸ்டி முறையிலான அரசியலமைப்புமாற்றம்.

என்பன பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவுகள் என. சிறீலங்காப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ள பாராளுமன்றத் தெரிவிக்குழுவின் தலைவரான சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மங்கள முனசிங்க, பி.பி.சிக்குக் கூறினார். எதிர்க் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் இச் சிபார்சுகளை ஏகமனதாக ஏற்று கையெழுத்திட்டுள்ளதாகவும், இதுவே சிறீலங்காவின் அரியத் சரித்திரத்தில், சிறீலங்காவின் ஆளும் கட்சி -எதிர்க் கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து கையெழுத்திட்ட முதலாவது சிபார்சு என்றும் அவர் புளுகியுள்ளார்.

ஆனால், இந்த சிபார்சுகளும் தமிழர்களின் இன்றைய நிலைப்பாட்டை நகர்த்தெறிய எடுத்துள்ள முயற்சியே. அதனால் வேறே இரு சிங்கள பேரினவாதக் கட்சிகளும் தாம் ஒன்றினைந்து இந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளன.

நடைமுறையில் சிறீலங்கா அரசியலமைப்பின் 6 ஆவது அரசியலமைப்புத் திருத்தம், ஐக்கிய சிறீலங்காவிற்கு எதிராகப் பேசவது சிறிசிய்து கூட நேரந் தூரோகம் எனக் கூறும் நிலை அப்படியான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபாரிசை இந்திய) பாணியான சமஸ்டி முறையைக் கூட பார் வைப்பதும் நடைமுறைப்படுத்த முடியும் குடியைப் நடத்துவதாலும் இன்றைய நிலையில் பூரணத் தீர்வான நடவடிக்கைக்கு அமைவாட்டாது கிழக்கில் மட்டும் குடியைப்பதை நடாத்தி, வடக்குக் கிழக்கினை தனித்தனியான அலகுகளாக்கி, தனித் தனியான இரு சபைகளை நிறுவி, தமிழர் தாயகத்தை துண்டாடப் பார்க்கிறது சிறீலங்காவை, பல்லின இனங்களின் சிங்கள மேலாண்மைக்குரிய நாடாக்க சிறீலங்கா அரசு தெரிவுக்குழுவின் முடிவுகளை வரவேற்றுள்ளது. இது தமிழர் தாயகம், தமிழர்களின் சுயநிர்ணய உரிமை என்பவற்றுக்கு மட்டுமல்ல, தமிழர்கள் சிங்களவர்கள் இருவரும் இலங்கைத் தீவின் தேசிய இனம் என்பதற்கும் வைக்கப்படும் ஆப்பு எனவே இது அவசரமான ஒரு அரசியல் அறிவிப்பு தமிழர்களின் அரசியல் தற்கொலைக்கு வழிகாட்டும் கைகாட்டி.

இந்த உண்மைகளை உலகறியும். அதனாலேயே பி.பி.சியைப் நிபாளர் தனது அறிவிப்பில், "தமிழருடைய சுயநிர்ணயக் கோரிக்கைக்கு முகம் கொடுக்க வேண்டுமெனக் கூறும் பாராளுமன்றத் தெரிவிக்குழு தமிழ் கைகளிக்கக் கூடிய எதையும் செயலில் செய்யவில்லை" எனக் கூறியள்ளார்.

எனவே இந்த இத்தில் பாணியான சமஸ்டி என்ற கொம்புத் தேனைக்காட்டித் தமிழர்களை முட்டாள்களாக மாற்றியிருப்பதே என்பதே சிறீலங்காவின் சதி.

1994 இல் சிறீலங்கா எதிர் நோக்கும் தேர்தல் சதுரங்கத்தில், தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு இந்த இத்தில் பாணியான சமஸ்டி என்ற காய்நகர்த்தல் இப்பொழுது நடை பெறுவது எனவும் பின்னர் இது வெறும் தேர்தல் காய் களவாக வழலாமெனவும் மற்றும் பட்டியிடும் எனவும் சமீபத்தில் இலண்டன் வந்த சிறீலங்காவின் அடிவருடித் தமிழர் ஒருவர் கூடக் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்த இத்தில் பாணி சமஸ்டி முறை என்ற சொற்தொடரை வைத்தே அரசியல் தீர்வுக்கு வலியறுத்தும் சர்வதேச சமூகத்தினரும் கூட வழங்கும் நாடு களுக்கும் சிறீலங்கா நுணாவித்தை காதுகளுப் பூவைத்துக் கொண்டிருக்கப் போகிறார் என மற்றொரு அரசியல் விமர்சகர் கருத்து வெளியிட்டுள்ளார். ■

மாவீர்களே!

நீங்கள் களத்தில் மடியும் கடைசி நேரத்தில் என்ன நினைத்தீர்? அந்த நினைவைக் கலக்கின்றோம். அதனை நிச்சயம் முடிக்கின்றோம்.



பூநகரியில் களமாடி, தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், வரலாறு காணாத சாதனையைப் படைத்து மாவீரர் பட்டியலில் தம்மையும் இணைத்துக் கொண்ட அனைத்துப் போராளிகளுக்கும்

எமது வீர வணக்கங்கள்.

TamilEelam Archive

பூநகரிப் போர்முனையில்...

பூநகரிப் போர்முனையில்...
புரிந்திட்ட சாதனையில்...
மாவீரச் சாவதனை...
மார்போடணைத்திட்ட...
மறத் தமிழ் வேங்கைகளே!

தம்பியின்... உரத்தில்...
முளைத்த... விருட்சங்களே!
அவன்...
தரிசனத்தில்...
எழுந்திட்ட அரண்களே!

எங்கள் மண்ணில்...
எதிரி தளமமைத்து...
எங்கள் மக்களது...
உயிர் குடித்தான்!
இது கண்டு...
பொங்கிப்... பாய்ந்த புலிகளே!
பகைவன் புறமுதுகு...
கண்டு..., புன்னகைத்துக்...
கண்மூடிவிட்ட...
சின்னப் பயிர்களே!
பின்னிக் கிடக்கும்...
சிலந்திவலை... பிய்த்தெறிய...
முன்னே வந்த... முதல்வர்களே!

உம்... வீரம்...
என்னே! என்னே! என...
எதிரிகளும் வியக்கின்றார்!
எம் தமிழர் தாமும்...
ஒரு நாள் விழித்தெழுந்து...
எங்கே? எங்கே? என...
உம்மைத் தேடுவர்!
உலகமெலாம்... உமைத்தேடி...
உள்ளம் களைப்பர்!

நூறாய்... இருநூறாய்...
உம்மை இழந்துவிட்ட...
ஆறாத் துயரினையும்...
தன்னுள் அடக்கி
எரிமலையை உண்டு விட்டும்...
குளிர்ந்திருக்கும் நிலம்போல...
எமக்கெல்லாம்...
உயிர் கொடுக்கும்... அந்த...
ஒப்பற்ற தலைவனது...
துயர் கூற வரிகளில்லை!

உலகத் தமிழரெல்லாம்...
ஊன்றி நினைக்கவென...
மலரும் கார்த்திகையில்...
மாவீரர் திங்களிலே...
நிலவாய்... கதிராய்...
நிறைந்தவரே!

அரங்குகளில் ஏறாத...
அற்புதப் படைப்புக்களே!
உங்களுக்காய்...
இரங்கற்பா... எழுதுவது...
முறையாமோ?
பிறந்ததோர் சமுதாயம்...
பேசிச் சொல்லுமே!
இறங்கி நீர் வருவீர்கள்!
இது எமக்குத் தெரியும்!
தமிழர்... இன்பச்...
கரங்களே!
உம்மைச்...
சுமந்தவரின்... பாதமெலாம்...
அரவித்தங்கள்...
பணிகின்றோம்!
உமது பணி...
தொடர்கின்றோமே!

- புலவர் -

சுதந்திரமாக உலாவினோம் மாவீரர்கள் சிந்திப் பெறுவோம் அவர் தந்த சுதந்திரமே

- கரன்

வாழ்வின் அர்த்தங்களைப் புரியவைத்த மரணங்கள். சாக்காட்டில் விழிப்பு என்ற தத்துவத்தை வினங்கவைத்த இறப்புக்கள். 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்தினுள் வைக்கப்படும்' என்ற வள்ளுவத்தின் விழுமிய உதாரணங்கள். விழுமியங்களுக்காக விலையில்லாத வாழ்வையே தந்திட்ட மாமனிதர்கள் மாவீரர்கள்.

மீண்டும் ஒரு வீரியமும், தமிழர் வரலாற்றில். மீண்டும் ஒரு புலிக் கொடிக்காலம். அன்றைய புலிக் கொடி அசைந்ததோ அரண்மனைக் கொடிமரத்தில், இன்றைய புலிக்கொடி அசைவதோ சாதாரண தமிழ் மகன் ஒவ்வொருவரினதும் இதயத்தில். இவ்வளவுதான் வித்தியாசம். எவ்வளவு மனத்திண்மை வேண்டும் தன்னையே அழித்து எடுத்த காரியத்தை முடிப்பதற்கு. தன் வாழ்வையே முடிப்பதற்கு. என் எண்ணிப்பார்க்கிறேன், ஏன் இறக்கினார்கள். இல்லை, ஏன் மரணத்தைத் தழுவிக்கொள்கிறார்கள். யாருக்காக அழிகிறார்கள், இல்லை எதற்காக தம் இன்னுயிரையே உவந்தளிக்கிறார்கள்.

என் நங்கை என் கண்முன்னாலே சிங்கள இராணுவத்தின் சிறுமைகருன்னான போது, நான் சிந்தியோ கண்ணீர் எங்கே என் ஆனை?

என் தாய் தமிழ்த் தாய் என்ப தினால், சந்தியிலே சிங்களக் காடையரால் நிர்வாணப் பொருளாக்கப்படுகையிலே, நான் ஒளித்திருந்து யன்னல் கம்பியில் தலையை அடித்தழுதது தான் நான் செய்த காரியம். எங்கே என் தன்மானம்.?

என் தந்தை தொழில் பறிக்கப் பட்டு, 'சிங்கள மொழி பேச இல்லையேல் சிறு தொழில்கூட உனக்கில்லை வெளியே போ' என வீட்டுக்கு அனுப்பப்படுகையில் நாங்கள் செய்ததோ... அழுதுவிட்டு சபிப்புடன்றி அரைவயிறாய் வாழ்ந்ததுதான். எங்கே எம் வீரம்?

என் தம்பிக்கு படிக்கும் உரிமையில்லை, தாய்மொழித்தலம். தொழில் செய்யும் உரிமையில்லை, சிங்களம் மட்டும் சட்டத்தால். உயிர் தாங்கும் உரிமையில்லை அடையாள அட்டை இல்லை என்ற நேரத்தில். ஏனோ வானவிருந்து இரந்துண்டு வாழ்வோர் என்ற சொற் றொடருக்கு பொருளானவர்கள் நாங்கள்.

இந்த நேரத்தில் சிலிர்த்தெழுந்தனர், சிரிளமைத் தமிழ் வாலிபர்கள். புலுக்கொடி தாங்கினர் புலிக்கொடியாய். 'மறவர் படை. நான் தமிழ்ப்படை. தன்மானம் ஒன்றுதான் அடிப்படை. வெறி கொள் தமிழர் புலிப்படை. அது வெல்லும் என்பது வெளிப்படை' என்றனர் பாய்ந்தெழுந்த புலிவீரர்கள். சோற்றுடன் சுதந்திரம் வராது. நேற்றுடன் முடிந்தது ஜனநாயக வழிப் போராட்டங்களிலும், நம்மைச் சிங்களப் பேரினவாதிகள் நசாய்த்த நாற்பாய் வதைத்த காலங்கள். இனி ஒரு விதி செய்வோம் 'சக்தி அலைப்பொன்றை உருவாக்குவோம்'. சந்ததி சந்ததியாய் ஆண்ட தமிழினம், மீண்டுமொரு முறை தன் மண்ணைத் தானே ஆள்வதன்றால். ஆட்பலம் வேண்டும் படைப்பலம் வேண்டும். எம்மைப் பந்தாடும் பகை வரைப் பந்தாக்கும் தமிழர் இராணுவத்தை நாமே உருவாக்க வேண்டும். நமக்கு நடந்த, நடக்கிற சிறுமைகள் நாளைக்கு நம் சந்ததிக்கு வரவிடக் கூடாது. நம் தந்தையர் விட்ட தவறினை நாம் விடமாட்டோம். வாழ்ந்தால் முடிபுடன் வாழ்வோம். வீழ்ந்தால் கொடியுடன் வீழ்வோம். எழுந்தால் புலியாக எழுவோம். வாழ்ந்தால் சுதந்திர நாட்டில் வாழ்வோம். எம் தாய் மண்ணை மீட்போம். தமிழீழக் கொடி மீண்டும் நிலைபெறும் உலக அரங்கிலே என்றனர் புலிப் படை வீரர்கள்.

முதலாளித்துவ எஜமானர்களால் பல நூற்றாண்டு காலம் ஆளப் பட்டுவிட்ட தமிழீழத் தமிழினத் திலும் அதன் சாயல்தான் காணப்பட்டது. மக்களில் பலரின் உள்ளத்திலோ சுயநலம். பொதுவாழ்வில் தேவையைத் திருப்தி செய்து, தனி வாழ்வினை உயர்த்தி, நான் வாழ்ந்தால் போதும் என்ற வாழ்க்கைச் சுயநலம் வாழ்வின் நெறியாகி நின்ற காலம். இதற்கேற்ப புரட்சிகர கருத்துக்கள், போராட்ட உந்துதல்கள் இலக்கியங்களிலோ ஆன்மீகத்திலோ மக்கள் தொடர்பு சாதனங்களிலோ வெளிநாடுகளில் அமுக்கப்பட்டு வந்த நேரம்.

இந்த நேரத்தில் தங்களையே தம் இனத்தின் விடிவுக்காக அழித்துக் புறப்பட்ட புதிய மறவர் கூட்டம்தான் புலிப்படை. அழிப் போம் பகைவரை, அழிவோம் கொள்கைக்காய் தேவையென்றால். அழிவில் பிறக்கும் சுகம். ஒடி மறைவும் தேக்கம். ஓங்கி எழுவர் தமிழர் புலிகளாய். எம் வீரத்தைப் பாடி நிற்கும் தமிழினம். நேயக்கொடுப் போம் தேச விடுதலையை என்னர். அந்தத் தியாகத் திருக் கூட்டத்தார்.

அவர்களுக்குத்தான் எத்தனை சோதனைகள். பாசறைகள் அமைத்து முனையிலேயே கின் எந்துத்தான் சிங்களப் பேரினவாதி பட்டிப்புலிக்கொட்டிக்குவித்தான் இராணுவத்தை. வான்படையை, கடற்படையை. அள்ளிக்குவித்தான் பணத்தை, பதவியை தேசவிடுதலை வீரர்களைக் காட்டிக்கொடுப்பவர்களுக்கு கூட வருவார் என நினைத்த அந்நாளைய அரசியல் தலைமைத்துவத்தை, பதவி வெறிபிட்டித் தன்வயிலில் கூட்டிச் சென்றான் கூடவே தமிழ் மக்களையும் புறப்பட்ட குழுக்களையும். போட்டிக் குழுக்களாக்கி தேச விடுதலையை நாசமாக்க திட்டம் வகுத்து வெற்றியும் கண்டார் இந்திய சிறி லங்கா பாசிச அரசுகள். காட்டிக் கொடுக்கும் கயவர்கள் ஒரு புறம். இந்திய சிறிலங்கா அரசுகளின் இராணுவ எதிர்ப்புக்கள் மறுபுறம். ஆனாலும், 'சத்தியம் சாகாது. அது செத்தவனிலும் மேலாது' என்பதற்கு உதாரணமாக கடந்த விடு எரியத் தொடங்கியது விடுதலைப் பெரு நெருப்பு.

இந்த நெருப்புக்கு நெய்யானவர் என்றான் எத்தனையோர்? தங்கள் உடல்களையே கற்பூரமாக்கித் தமிழீழத் தேசத்திற்கு ஒளி காட்டியவர்கள்தான் எத்தனையோர். தங்கள் தாயை, தந்தையை, அண்ணரை, தம்பியரை, அக்காவை, தங்கையை, உற்றார்-உறவினரை, காதலனை -காதலியை, பெற்ற சுமந்தகனை உதறித் தள்ளிவிட்டு. உரமுள்ள நெஞ்சோடு கனமாடப் புறப்பட்ட தன்னலமற்ற மறவர் கூட்டம் ஆரால், நதியாகி, விடுதலைப் புலிகள் எனும் கடலாகி நிற்கிறது. அந்தக் கடலால் சூழப்பட்ட பூமியாக, பாதுகாப்புள் நிகழ்கிறது தமிழீழத் தாய்மண். அந்த மண்ணை மிதிக்கும் எந்த எதிரியும் அங்கே நிலைகொள்ள முடியாமல் ஓடுகிறான். அத்த கைய ஒரு சக்தி மேடை அங்கே உருவாக்கப்பட்டுவிட்டது.

இந்தச் சக்திதான், இன்று உலகில் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒன்று நடைபெறுகிறது என்பதை உலகிற்குக் காட்டி நிற்கிறது. சிங்கள மொழியிலே உள்ள பழமொழிபோல், 'புலி வாலைப் பிடித்தவன் கதை'யாகத் தவிக்கிறது சிங்கள அரசு. ஆனாலும் அதன் சிங்கள பௌத்த பேரினவாத வெறி இன்னும் அடங்கவில்லை. வெறித்தாண்டவத்தை நடாத்த முயன்று முயன்று முதுகெலும்புடைபட்டு, ஒடி ஒளிக்கின்றது சிறீலங்கா அரசு. இது தான் புலிகளின் சக்தி. தமிழீழ மக்களின் சக்தி. சத்தியத்தின் சக்தி. சாகாத வரங்களைப் பெற்ற தமிழீழ தியாகிகளின் சக்தி. இந்த சக்தி நிலைக்கு தம் சதையைத் தந்து, சிதையை அணைத்து விடுதலை விதைகளாக மண்ணில் வீழ்ந்தவர்கள்தான் மாவீரர்கள் என்னும் மானிடர்கள். சாவென்ற சத்தியன்.

எமக்காகத் தம் புற உருவைச் சிதைத்தவர்கள். எம்மில் எம் இனம் உள்ளவரை, முச்சாக நிற்கும் வலிமை பெற்றவர்கள். எமக்காகத் தம் வாழ்வு முழுவதையும் அர்ப்பணித்துவிட்டு, தமிழ்த் தெய்வங்களாய், தமிழ் காக்கப் புறப்பட்ட புனித ஆன்மாக்கள். இவர்களைக் காணும் வரை கடவுளுக்கு உருவில்லை என்றுதான் நினைத்தேன். இப்போழுது கடவுளின் உருக்களாக எத்தனை மாவீரர்கள். வாழாது அறுத்த தமிழினம் என்றார்கள். வரலாறாகி நிற்கிறார்கள் மாவீரர்கள். தேசிய இனம்? தமிழினம் என்றார்கள். தேசிய இனம்தான் தமிழினம் என்று தம் உயிரைத் முத்திரைகுத்தி நிற்கிறார்கள் மாவீரர்கள். வயிற்றை உரியை இவர்களுக்குண்டா? என்றார்கள் வயிற்றை உரிமைக்காக வயத்தையே அழித்து. மரணமொரு பூச்சண்டிக்கு ஏற்கும் ஒரு இனமும் உண்டு என்று உலகிற்கு சொல்லி உரைத்தார்கள் மாவீரர்கள்.

அவர்களுள் ஒருவனாகினர் கரும்புலிகள். இவர்கள் ஒருபடி உயர்ந்த பெரு வீரர்கள். தம் மரணத்துக்கு நேரம் குறித்து அந்த நேரத்தில் இலக்கில் விழுவதைவிட வித்தை வினர்கள் இவர்கள். இவர்கள் முன் அணுகுண்டும் செயலிழக்கும். அலைகடல் போல் பெரும் படையும் நிலைகலங்கும். சத்தியம் ஒன்றே இவர்களின் கையிலை. அண்ணன் ஆனை மேற்று தமிழீழ விடுதலையை கொண்டுவர மறுபடி செல்லவும் துணிந்து நிற்கும் தாயைத் திருகூட்டத் தேவர்கள். 'எத மன வேதங்கள் படைத்த மனிதர்கள் அல்ல. தமிழும் படைக்கும் பிரம்மாக்கள். ஒரு வெடியில் படை சிதறும். இன உணர்வில் அவன் சிதைவான். கடலையிலும் ஒளி பிரக்கும். தமிழ்த் தீச்சுடரின் உருவாக அவன் உருவி ஒளிவான். வானத்திலும் தேவைபேற்படின் மினை முடிக்கும் ஆற்றல் உள் சோர் வானில் ஒளிர் மொழ் கனிலைகளம் ஒளிபிழக்கும் அவர் புகழொளியில். ' இவர்கள் கரும் புலிகள். மாவீரகளுள் தனி வீரர்கள்.

இத்தகைய மாவீர் வாழ்ந்திட் காலத்தில். நாம் வாழ்ந்தோம் என நாளை மானிடர்கள் கவி படிப்பர். நாமோ நம்முள் ஒருவராக இவர்கள் இருந்தார்கள் என எண்ணுகையில், பெருமித நாம் நன்றியுணர்வால் பூரித்த மகிழ்வோம்.

ஆனாலும் இன்றோ நம் தமிழர் இவர் பெருமை உணர்ந்தாலும் அவர் பாருக்காக இருக்கின்றார். இதனால் பிறப்பெடுக்கின்றார் என எண்ணிப் பார்ப்பது ஏனோ குறைவு நமக்காக, நம் குழந்தைகளுக்காக, நம் தமிழினத்துக்காக, நாம் வாழவேண்டும் என பதற்காக அவர்கள் தம் வாழ்வை மாவீர்களாக மாற்றிக் கொள்கிறார்கள். நாமோ அவர் நோக்கு நிறைவேற என்ன செய்கிறோம்? அவர் தம் திருக்கரம் போற்றிய புனித போருக்கு என்ன பங்காற்றுகிறோம்? அவர்கள் உருக்குலைய உருவாகும் வெற்றிகளைக் கலைக்கும் கயநலப் பிறப்புக்களாக நிற்கின்றோம். மேற்கு எம் எண்ணில் வரலாறு பிறப்புக் களாய் வாழ்த

தொடர்ச்சி 14ம் பக்கம்...

தலைவன் வாழி!

மாவீர் தியாகத் தீயில்
யாக நடைபோடும்...
வீரமறவனே!
உயர்ந்த இலட்சியத்தின்...
உறைவிடமே!
உன் இதயத்துத்...
துயர் துடைக்கும்...
வழியறியோம்!
வகையறியோம்!

உலகத் தமிழர்... புதிய வேதமாய்
உதித்த தலைவா!

ஓர்
இளைய தமிழீழத்தின்
எழுச்சி மிகு கீதமே!

உன்னைத் தந்த...
அந்த இயற்கையின் கருணைக்கு
எங்கள் நன்றிகள்!

உன்னைத் தந்த ஒரே காரணத்தினால்
நமியான இன்னல்களைத் தாங்கி நின்ற
வல்வெட்டித்துறையம்...
மண்ணைக் கடலருக்கும்...
எங்கள் நன்றிகள்!
உன்னைப் பெற்றவளின் பொன்னடிகளில்
எமது அன்புப் பூக்களைச் சொரிந்து...
வணங்குகின்றோம்!
நீ அங்கு கருத்தரிக்கப்படவில்லை!
ஓர்
உன்னைத் தமிழன்... உருத்தரித்தான்!
எமது தாயகக் கனவின் அவதார புருசனே!
உனக்கு எமது வாழ்த்துக்கள்!

புலவர்.



மாணவன்
விடுதலைப்புலி போராளி தினேஸ்

போராளிகள் எதையும் சாதிக்க வல்லவர்கள்

"இன்று உனது மிருதங்க அரங்கேற்றம் நடை பெறுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். மிகவும் குறுகிய காலத்தில் இசைக்கலை பயின்று, மேடைவேறும் அளவிற்குத் திறமை பெற்ற உனது முயற்சியை நான் பாராட்டுகின்றேன்.

எமது போராளிகள் போர்க்கலையில் மட்டுமன்றி, சகல கலை நுணுக்கங்களையும் கற்று சகலகலா வல்லவர்களாக உருவாகவேண்டும் என்பதே எனது ஆவல். எனது ஆவலைப் பூர்த்திசெய்யும் வகையில் நீ ஓர் இசைக் கலைஞனாக உன்னை உருவாக்கி, எமது போராளிகள் எதையும் சாதிக்கவல்லவர்கள் என்பதை நிரூபித்துக்காட்டியுள்ளாய். இசைத்துறையில் உனது முயற்சி வெற்றி பெற எனது மனமார்ந்த ஆசிகள்".

(விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி தினேஸ் (அரியநாயகம் சிறீகாந்தா) அவர்களின் மிருதங்க அரங்கேற்றத்தைமுன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் வழங்கிய ஆசிச்செய்தி இதுவாகும்.)

மாவீர்களை அஞ்சலிப்போம் வாரீர்!

மண்மீட்க உயிர்தந்திட்ட
மாவீர்களின் மாதங்களை
கண்ணீர்ப் பூக்களால்
அஞ்சலிப்போம் வாரீர்!

மாவீர்களே நீங்கள்!
காற்றிலும் வேகமாகச் செயற்பட்டீர்கள்
காற்றோடு காற்றாகப் போனீர்கள் - அந்தக்
காற்றைச் சுவாசித்து
எங்களைப் புனிதப்படுத்துவோம்.

மரணத்திலும் சரித்திரம் படைத்த
மாவீர்களே!
மௌனகுவர்த்தியாகி உங்களைத்
தந்தீர்கள்
அந்த வெளிச்சத்தில் தெரிகிறது தமிழீழம்
அதனை நோக்கி நாமும் புறப்பட்டோம்!

வஞ்சகர்கள் உங்களை
வஞ்சித்து விட்டார்கள் - ஆயினும்
விழவிழ எழுவோமென
விடுதலைப்புலிகள் தீர்த்த
வேட்டுக்களால் இன்று - எதிரிகள்
விடுவிடுவென ஓடிப்போயினர்.

தாயிலும் மேலான
தமிழீழ மண்ணையும்
தமிழீழக் குடும்பத்தையும் காக்க
துணிந்திட்ட மாவீர்களே!
தங்கள் பாதங்களை
எங்கள் கண்ணீரால் நனைக்கிறோம்.

இடிமுழக்கமும் இயற்கையும்
சோவெனப் பெய்யும் பெருமழையும்
ஆறுதல் தேடி அலைகின்றனவோ?
அதனால்தான் கார்த்திகையில்
பெருமழை கொட்டுகிறதோ?
செஞ்சுடர் பரப்பும் சூரியனும்
கார்த்திகையில் சோகமாகத் தெரிகிறது.
கார்த்திகைப் பூவும்
மாவீரான உங்களை
நினைவு கூறுகின்றதோ?

மாவீர்களே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரியவில்லை
எங்கள் இதயங்களில் வாழுகிறீர்கள்!

அதனால்தான்
இயற்கை மட்டும் அழவில்லை!



இன்று தமிழீழம் தொடக்கம்
தரணியெங்கும் பரந்திருக்கும்
தமிழர்கள் அனைவருமே
கார்த்திகை இருபத்தேழில்
கதறி அழுகின்றனர்.

போராட்டத்திற்கு வரையிலக்கணமும்
போருக்கு வீர உணர்ச்சியும்
மார் முழுவதும் போற்றும் வண்ணம்
நீயாகமென்னும் சொல்லுக்கு
புதிய வடிவமும் கொடுத்து
எதிரியை தலைகுனிய வைத்தீர்களே!
உங்களுக்கு எங்கள் கண்ணீர்ப்பூக்கள்

தமிழீழம் வென்றெடுக்கவென
தயக்கமின்றி போர்க்களம் சென்று
தரணிபோற்றும் வீரம் காட்டி
தம்முயிரைச் சாய்த்தவர்களே மாவீர்கள்!
அவர்தம் பணியினை நாம் தொட
அவர்களை இங்கு அஞ்சலித்து
அகந்தை பிடித்த எதிரியை ஒடுக்க
அதற்காக உழைக்க உறுதியுண்டு
அவர்தாள் பணிந்து மன்றாடுவோம் வாரீர்!

■ மனோபுஸ்பா

இயன்ற அத்தனை கரங்களும் ஆயுதம் ஏந்தட்டும்.

அன்பின் தம்பி தங்கைகளுக்கு!

உங்களையும், உங்களை ஒத்த எண்ணரிய இளம் உள்ளங்களையும் எண்ணியே இதனை எழுதுகிறேன்.

உணர்வைப் பரிமாறவும், பங்குகொள்ளவுமே இதனை எழுதுகிறேன்.

எதிரியின் தாக்குதல் எல்லை மேலும் விரிவாக்கப்பட்டு இந்த ஒத்த நிலையும், உறுதியும் எமக்குப் பலமாகி நின்று, எழுத்தமிழினம் என எம்மை நின்னைக்க முடியுமே அல்லாது பல வினப்படுத்த முடியாது.

நாம் பலம் கொண்ட ஓரினம் என்பதையும், எம் தாய் மண்ணைக் காத்து நாம் முன்னர் இருந்தது போலத் தனிநாடாக, சுயமாக வாழத்துணிந்துள்ள இனம் என்பதனையும், எம் எதிரி உணர்ந்து கொண்டு, கடந்த 40 வருடமாக எமது மண்ணைப் படிப்படியாகப் பறித்திருக்கிறான். தமிழின ஒடுக்குதலை அவன் ஒன்றன் பின் ஒன்றாகத் தனது அரச இயந்திரம் மூலம் அமுலாக்கி வந்திருக்கிறான்.

பட்டிப்பளைப் பகுதி 'கல்ஓயா' ஆயிற்று. இது போன்ற பலநில சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மூலம் எம் தொன்று தொட்ட தமிழ்ப் பிரதேசங்கள் பல, அரசின் கெடுபிடிக்கு உள்ளாகியும், தமிழ் மக்கள் அங்கு வாழமுடியாது அகற்றப்பட்டுள்ளதும் தெரிந்ததே. ஆனால் இன்று,

நிலப் பறிப்பு மட்டுமன்றி தமிழின ஒழிப்பையே பகைவன் திட்டமிட்டு அதனைத் தன் முழுப் படை பலம் மூலம் அமுலாக்க முன் வந்துள்ளான்.

தமிழ்க் கிராமங்கள் சுற்றி வளைக்கப்படுகின்றன. இளம் பருவத்தினர் கைதாகிக் கொண்டு செல்லப்படுகின்றனர். கொலை செய்யப்படுகின்றனர். காணாமல் போதல் என்பன சிங்கள அரச செய்யும் நாளாந்த நிகழ்வுகளாகி விட்டன.

இவை மட்டுமா? பொதுமக்கள் மீது வான் தாக்குதல்! இடைவிடாத எறிகணை வீச்சு! 80 வயது மூதாட்டியிலிருந்து இரண்டு வயதுக் குழந்தை வரை தங்கள் வீட்டிலிருந்தபடி குண்டு வீச்சுக்கும், எறி கணைக்கும் இலக்காகித் துடிதுடித்து உயிர் விடும் நிலை எதற்கு? ஆயிரமாயிரம் குடும்பங்களின் இடம் பெயர்வும், அனாதை நிலையும் எதற்கு? புகையிரத, உலங்கு வானூர்தி, கப்பல் சோனிக் விமானத் தாக்குதல்கள் எதற்கு? வீடுகள், கடைகள், பாடசாலைகள், கோவில்கள் இன்று இடித்துத் தகர்வது எதற்கு? படகுகளை வளைத்துப் பிரபாணிகள் மீது வான் வெட்டும், உடற்சிதைவும் எதற்கு?

தமிழர் என்பதால்!

இத்தனையும் செய்து எம் எதிரி தனது கயிற்பாடலின் பலம் கொண்டும், கையேந்திப் பெற்ற பிற நாட்டு ஆயுத உதவிகொண்டும் முன்னேற முயலுகிறான்.

ஆனால்,

125 படையினர் பலி, இதைவிட 170இற்கும் மேற்பட்ட காயம், இது இம்மாத முதல் நாள் செய்திகள் ஆகும். இவை எதிரியிடையே எண்ணாத திகைப்பையும், பரபரப்பையும் ஏற்படுத்தி இன்னமை உண்மை. ஆனால், இவை இலேசாக வந்தவையல்ல. விடுதலைப் புலிகளின் 80 போராளிகளின் வீரச்சாவின் பின்பே இவை சாதனையாக முடிந்தது.

இவை தந்த தோல்விகளுடன் எதிரியின் நடவடிக்கை முடிந்து விடவில்லை. 380 படைகள் எறிந்து வீடுகள் கடைகள் தீக்கிரை என்கின்ற பேரச் செயல்களையும் செய்யாது எம் எதிரி பின்னடைந்து விடவில்லை.

இப்போதும் அவன் பூரணமாகப் பின்வாங்கி விட்டான் என நாம் எண்ணி மகிழ்வதற்கு எதுவுமில்லை. அவன் மீண்டும் ஒரு முனையிலிருந்து தாக்கவே திட்டம் தீட்டுகிறான்.

ஒதுங்கி விட்ட அவன் இன்னும் பெருக்கி கொண்டுவரவே முயல்வான்.

அவனை எம் எல்லைப் புறத்தில் சந்தித்துத் தாக்கவும், கொல்லைப் புறத்தில் வரின் அவனை அடித்து வீழ்த்தவும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

போர் எந்நேரமும், எங்கும் நேரலாம். விதிவிலக்கு இருப்பது எம் கடன்.

அவன் முன்னர் பல தடவை தூக்கியடிக்கப்பட்டமையும், தூக்கிச் சிறுத்தப்பட்டமையும் புதிதான ஒரு நிகழ்வு அல்ல.

அடித்து நிறுத்தப்படும்போதும், தூக்கியடிக்கப்படும்போதும் தான் அவன் பின்னடைவு பெறுகிறான் ஒழிகிறான்.

அடித்தால் தான் எதிரி ஒழிவான்.

நாம் வாழ வேண்டின், எம் சந்ததி இம் மண்ணில் தொடர்ந்து வாழவேண்டின் இன்று அழிக்க வரும் எதிரியை நாம் அழித்தே ஆகவேண்டும்.

இதைத் தெளிவும், உறுதியும், எங்கள் இனைந்த ஆயுதம் ஏந்திய கரங்களுமே எங்கள் பலம்.

எதிரி எல்லை அழிக்கும் நோக்குடன் வருகிறான். அவன் ஆயுத பலத்துடன் வருகிறான்.

அவனுக்குப் பதில் சொல்ல வல்லது எமது ஆயுத பலமும், இலட்சிய உணர்வும், திடமுமே. இதை நாம் நிலை நாட்டியே வருகின்றோம்.

அவனுக்குத் தூதர்களல், பாலகர் என்ற வேறுபாடுமில்லை.

நாம் தலைவணங்கி பிடித்துப் ஆடிப முடியாது. பேச்சுக்கு இனி இடமில்லை.

எம் இன்றைய வாழ்விற்கும், வருங்கால விடிவுக்குமான ஆயுதப் போராட்டம் எம் கண்முன் நடைபெறுகின்றது.

இதில் நாமத்திற்கு இடமில்லை. இயன்ற அத்தனை கரங்களும் ஆயுதம் ஏந்தும் கரங்களாக, விடுதலைப் போராட்ட வடிவங்களாக மாற வேண்டும்.

எனவே முதிசோர்க்கும் நிச்சயம் பங்குண்டு. பதிக்கப்படு சோர் அனைவருக்குமே அதற்கேற்ப இயன்ற சில பங்கை நாம் அளிப்போம்.

நாமத்திற்கு இடமில்லை.
நன்றி மீண்டும் சந்திப்போம்.

உங்கள்
ஜெயம்.

வரலாற்றில் முதல் பெண்புலி

"அப்ப காயத்திற்கு என்ன சொல்வது?" என்றேன். "உனக்குத் தடி குத்தி விட்டது என்று கூறுகிறேன். எனது காயத்தை யாருக்கும் காட்டமாட்டேன்" என்றாள். அதேமாதிரி மடித்திருந்த சேட் கையை இழுத்து மூடிவிட்டாள். முகாமுக்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கே இதே மாதிரியே கூறினாள். இருவரும் மோட்டார் சைக்கிளால் வீழ்ந்ததை யாருக்கும் சொல்ல வில்லை. ஒருநாள் எனக்கு எதற்கோ அடித்துவிட்டாள். இருவருமே தூரத்துப்பட்டுச் சண்டை செய்ய, பொறுப்பாளர் வந்து விலக்குப் பிடித்துவிட்டு இருவருக்கும் தண்டனை தந்து, "உங்கள் இருவரையும் மேய்க்க எனக்குப் பிறம்பாக ஒரு நாள் வேணும்" எனக்கூறி, "போங்கோ" என்று விட்டார். மாலதி அடித்த கோபத்தில் மோட்டார் சைக்கிளால் வீழ்ந்ததை எமது பொறுப்பாளரிடம் கூறிவிட்டேன். "சொல்லிப் போட்டாய். இஞ்சால வா உனக்கு நல்லாத் தாறன்" என்றான். இவள் நினைத்ததைச் செய்தே முடிப்பாள். இதனால் அவளின் மோட்டடிக்குப் பயந்து, பொறுப்பாளருக்குப் பின்னாலேயே திரிந்தேன். அன்றிரவு நித்திரையில் வைத்து 'நம்பிக்கைத் துரோகி' எனக்கூறி, எனக்கு அடித்து விட்டாள். நான் நல்ல நித்திரையில் இருந்ததால் திருப்பி அடிக்காமலேயே படுத்துவிட்டேன்.

ஒருநாள் எங்களுடைய பொறுப்பாளர் எமக்குப் புதிய சயனைட்டுகள் தருவதற்காக, சயனைட்டைக் கறுப்பு நூலால் கட்டிக் கொண்டிருந்தார். நானும் மாலதியும் பொறுப்பாளருக்கு அருகில் இருந்தோம். "நாங்களும் கறுப்பு நூல் கட்டுறம். தாங்கோ" என்றோம். பொறுப்பாளர் "இரண்டு பேரும் ஒரிடத்தில் வந்தால் நன்மை நடக்காது. அதிலையும் தன் வயதை ஒத்த இரண்டு பேரும் எப்பவும் இருங்கோ" என்றார். கெஞ்சிக் கேட்டதால் எனக்குச் சயனைட்டில் கறுப்பு நூல் கட்ட அனுமதி கிடைத்தது. நான் சயனைட் கழுத்தில் நூலைப் போட்டு இறுக்கிக் கொண்டிருந்தபோது, இவள், "இறுக்காவிடில் கழண்டுவிடும். நல்லா இறுக்கு" என்றாள். நான் இறுக்கிய போது, "இன்னும் இறுக்கி இழு மணி. இறுக்கி இழு மணி" என உற்சாகம் ஊட்டியதால், நான் பலமாக இழுத்தபோது, சயனைட் கழுத்தோடு வெடித்துவிட்டது. எனக்குத் தூள் பறந்ததால் சாதுவான மயக்கம் ஏற்பட்டது. அவளும் உடைந்ததை எடுத்து மணந்தபோது, அவளும் சாதுவான மயக்கமுற்றாள். பொறுப்பாளர் ஏசினார், "அறிவாய்ப்படுவார் செய்கிற வேலைகள் முன்ரா, இரண்டா.....?"

கோட்டையிலும் தொலைத் தொடர்பு நிலையத்திலும்

1987 இல் மன்னாரை விட்டு யாழ்ப்பாணம் வந்தோம். யாழ்ப்பாணத்தில் கோட்டையைச் சுற்றி காவற் கடமைகளில் ஈடுபட்டிருந்தோம். இக்காலப் பகுதியில் மீச் நோட்டுப் பக்கமாகக் காவற் கடமையில் நின்றோம். ஒரு நாள் நாங்கள் வேறு பகுதியில் கண்ணிகள் வைக்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தோம். மாலதி மட்டுமே காவற் கடமையில் நின்றிருந்தாள். அப்போது எதிர்பாராத விதமாகக் கோட்டையில் இருந்து இராணுவத்தினர் முன்னேறி மாலதியின் காவல் நிலைக்கு முன்னால் வந்துவிட்டனர். மாலதி சிறிது நேரம் தனித்து நின்றே இராணுவத்தினருக்கு எதிராக ரவைகளைப் பொழிந்து தள்ளினாள். சிறிது நேரத்தில் மேஜர் சோதியா அக்காவும், எமது பொறுப்பாளர்களும் சென்று சண்டை செய்தனர். முன்று, நான்கு பேர்கள் மட்டுமே சண்டை செய்வதைக் கண்ட இராணுவத்தினர் மேலும் முன்னேற முயற்சி செய்தனர். இவ்வேளையில் மேஜர் சோதியா அக்காவின் குப்பி உடைந்து, அவர் மயக்கம் அடைந்ததால் அவரை இருவர் தூக்கிச் சென்றனர். மாலதி தனித்து நின்றே சுட்டுக் கொண்டு நின்றாள். மேஜர் சோதியா அக்காவை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்றதும், மாலதி ஓடிச் சென்று, நாம் ஏற்கனவே வைத்திருந்த 'பன்றிக்குட்டி மைன்ஸை' வெடிக்கச் செய்து விட்டாள்.

பெரியதொரு வெடி ஓசையினால் அதிர்ச்சி அடைந்த இராணுவத்தினர், பயத்தின் பீதியால் பின்வாங்கி, கோட்டைக்குச் சென்றுவிட்டனர். பின்னர் "மாலதி ஏன் 'பன்றிக் குட்டியை' அடித்தாய்" எனக் கேட்கப்பட்ட போது, "ஆமியை எதிர்ந்து தாக்குவதற்கு எமது ஆட்கள் நிறையப் பேர் இல்லை என்பதை அவன் தெரிந்து விட்டான். இதனால் விரைவாக முன்னேறினான். எங்கடபாட்கள் வருவதற்கிடையில் ஆமி எங்களுடைய நிலைகளுக்கு முன்னேறி விடுவான் என்றதனால், அவனைப் பின் வாங்கச் செய்யவே எங்கேயோ கிடந்த மைன்ஸை அமத்தி விட்டேன்" என்றாள்.

மாலதி நிகர் என இப்படி ஒர் மாற்று நடவடிக்கையை செய்ததையிட்டு நாம் மகிழ்ச்சி அடைந்தோம். மாலதி எவ்வளவுதான் வினையாட்டுத்தனம் செய்தாலும் அவளுக்குள் வீரமும், அஞ்சாமையும் நிறைந்து காணப்பட்டது. கோட்டையில் இருந்து செல்லடி தொடங்கியதும் வெளிக்கிட்டப் போதான் என்ற ஏக்கம் எங்களுக்கு இருக்கும். உடனே நாங்கள் இராணுவத்தை எதிர்ப்பதற்கு, எங்களுக்கு என ஒதுக்கப்பட்ட காவல் நிலைகளுக்கு விரைந்து செல்வோம்.

இந்த விரைவு வேளைகளில், மாலதியே தனது நிலைக்கு முதலில் சென்று விடுவாள். நாம் எல்லோரும் செல்லடிக்கு நிலையெடுத்து, நிலையெடுத்துச் செல்வோம். மாலதியோ அப்படியில்லை. முகாமில் இருந்து ஓடத்தொடங்கினால் தனது காவல் நிலையை அடைந்ததும் தான் திரும்பிப் பார்ப்பாள். சிலவேளை வாசல் முட்டி தாண்டாமல் திரும்பி வருவாள்.

மாலதி எத்தேரமும் சேட் கையை உயர்த்தி மடித்துவிட்டு, ஜீன்ஸ் காலை மடித்துக்கொண்டே நிற்பாள். நாங்கள் 'ரவுசான் எடுவை' என்று பகிடி பண்ணினால், அவள் "இல்லை நான் புரூஸ்லீ எடுவைதான் எடுக்கிறன். எப்போதும் கைகாலும் காலாலும் சண்டை பிடிக்கத் தயாராக இருக்கிறேன். என்னைக் கண்டால் ஆமி ஓடுவான்" என்று கூறுவாள்.

1987 இன் முற்பகுதியில் கோட்டைப் பக்கத்திலுள்ள தொலைத் தொடர்பு நிலையம் தாக்கப்பட்டது. இத்தாக்குதலில் மாலதி பங்கு கொண்டாள். சண்டை என்றால் மாலதி துடிப்புடன் நிற்பாள். உலங்குவானூர்தி வருவதையோ, குண்டு வீச விமானம் வருவதையோ, செல் வருவதையோ பார்க்கவும் மாட்டாள். முன்னுக்குச் சென்று ஆயிரைச் சுடுவதிலேயே குறியாக நிற்பாள். இதே மாதிரித்தான் தொலைத் தொடர்பு நிலையத் தாக்குதலிலும் ஈடுபட்டாள். ஒரு பெண் போராளி இத் தாக்குதலில் காயமடைந்தாள். காயப்பட்டவளைத் தூக்கிச் செல்லுமாறு மாலதியிடம் பொறுப்பாளரால் பணிக்கப்பட்ட போது, இந்த நேரம் சண்டை முடிந்து ஆமிகள் கைப்பற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். மாலதி செல்ல மறுத்து, "வேறு ஒருவரை அனுப்புங்கள்" என்று கெஞ்சினாள்.

"வேறு யாருமில்லை சண்டை முடிந்த தூரமே. நீங்கள் கொண்டு போங்கோ" என்றபோது, அவளிடத்தை விட்டுப் போக விருப்பமின்றி, காயப்பட்ட போராளியைத் தூக்கிச் சென்று, எதிர்த்தாக்குதல் செய்து வேறு ஒரு போராளியைக் கூப்பிட்டு, "இவரைக் கொண்டு போகட்டும் என்று பொறுப்பாளர் சொன்னவர்" எனக்கூறி, காயப்பட்ட போராளியை அவசரமாக ஒப்படைத்து விட்டு மீண்டும் தான் நின்ற இடத்திற்கு விரைந்து ஓடி வந்துவிட்டாள்.

இந்தச் சண்டையின் போது, மாலதியின் உடலில் சில பகுதிகளில் (கை, கால் உட்பட) சிறு சிறு செல் துண்டுகள் இருந்தன. "மருத்துவமனைக்குச் சென்று பிள்ளை எடுத்து விட்டு வா" என்ற போது, "போக மாட்டேன்" என்று மறுத்துவிட்டு, பதுபதுப்பை எடுத்து, தானே தன் உடம்பில் இருந்து செல் துண்டுகளை வெட்டி எடுத்தாள். தன்னைத் தானே கீறும் அளவுக்கு அபாரமான துணிவு கொண்டவள்தான் அவள்.

மாலதியின் குறும்புகள்

மாலதி, சண்டை செய்வது என்றால் மிகவும் சந்தோசத்தில் துள்ளிக் குதித்துக்கொண்டு நிற்பாள். சண்டைக்கான அறிகுறிகள் எதுவும் தென்பட்டால், உடனேயே மகிழ்ச்சியோடு "ஆயிக்குச் சொல்லியடிப்பேன்டி. அடிச்சால் என்டால் தெற்றி ஆதானை" என்று பாடிக் கொண்டே நிற்பாள்.

1987 இன் நடுப்பகுதியில் நாங்கள் கோப்பாய்க்கு வந்தோம். கோப்பாயில் இருந்து, ஒவ்வொரு நாள் இரவும் நாவற்குழி இராணுவ முகாமைச் சுற்றி நூம் காவற்கடமை நிலைகள் இருந்தன. இதில் நாம் கோப்பாய் பாலத்தில் காவற் கடமையில் ஈடுபட்டிருந்தோம். இரவில் இரண்டு பிரிவாக பிரிந்து படுப்போம். எங்களுக்குக் கிடைத்த இடம் கடல. கடலைக்குள் படுத்திருப்போம். சத்தங்கள் ஏதும் கேட்டால் காவற்ற டமையில் நிற்பவர் இன்னும் இரண்டொருவரை எழுப்பிக்கொண்டு, மண் மேட்டால் சென்று, ஆமியின் நடமாட்டத்தை அவதானித்து வருவோம்.



மே லெப் மாலதி
(பேரு சாயிவி)
ஆட்காட்டிவெளி, மன்னார்
பிறப்பு: 4/01/67 வீரச்சாவு: 10/10/87

மாலதி காவற் கடமையில் நிற்கும் போது ஏதாவது சத்தம் கேட்டால், தானே தனியாகச் சென்று எதிரியின் நடமாட்டத்தை அவதானித்து வருவாள். எங்கள் நிலைக்கு முன்னால் தண்ணீர் இருந்தது. தண்ணீர்ச் சத்தம் கேட்கும். இராணுவ முகாமில் அடிக்கடி விளக்கு கள் அணைப்பார்கள். ஆமி அவ்வேளை நாங்கள் உசார் நிலைக்கு வருவோம். காவற் கடமையில் நிற்கும் மாலதி அடிக்கடி எல்லாரையும் எழுப்புவாள். இப்படித்தான் ஒருநாள் நித்திரையால் எழும்பி "என்டை" என்றாள். "கேடி, கேடி" என்று பல முறுத்தினாள். "உண்மையாம் நான் கதைப்பன். வெள்ளையாம் ஆமியைக் கண்டனான்" என்று கூறினாள். "நேற்று எரிச்ச பெடியின்ர ஆவியடி. இண்டைக்குத்தான் வெளியே போகுதாக்கும்" என்று மேலும் மேலும் எங்களைப் பய முறுத்தினாள்.

ஒரு நாள், நான் ஒரு சீமெந்து மேடை மேல் படுத்திருந்த போது, மாலதி வந்து என்னை எழுப்பி சொன்னாள், "எடியே கெதியாய் எழும்படி. எழும்படி" என்றாள். அவசரமான எனது ஆயுதத்தையும் எடுத்துக்கொண்டு "ஆமியோ வந்திட்டான்" என்று கேட்ட போது "எடியே நீ படுத்திருந்த இடம் சாதியடி" என்றாள். எனக்குச் சரியான கோபம். எரிந்து விட்டு போய் படுத்துவிட்டேன். மாலதியின் இந்தத் தொல்லைகளால் மாலதிக்குக் காவற் கடமை நேரம் போடாமல் விடுவோம். இரண்டு நாளால் சண்டை பிடித்து, காவற்கடமை நேரம் போடச் செய்து விடுவாள்.

காவற் கடமையில் ஈடுபடும் இடத்திற்குச் சென்றதும், "வாடி நித்திரை கொள்ளும் வரை இடம் பார்ப்போம்" என்பாள். "எம்மை ஒரிடத்தில இரடி" என்றால், "எடியே எங்கே எங்கே நிலை எடுத்து ஆடப்போம் என்று இடம் பார்த்தால் தானே ஆமி வந்தால் அட்காசமாக ஆடலாம்" என்பாள். பின்னர் இரண்டு பேரும் கோப்பாய் கிறோசரி அடியில் இருந்து கைதடிப் பாலம் நோக்கி கல்லரை நடந்து நடந்து செல்வோம்.

பகலில் எங்களுடைய முகாமில் நித்தோம். பகலில் இரண்டு பேரும் ஒரே சண்டை பிடிப்போம். சற்று நேரத்தில் சமாதானமாகி ஒன்றாக வெளியில் செல்வோம். நான் அடித்து விட்டு ஓடுவேன். அவள் சத்தி என்று பாரால், கோப்பாய் சந்தியில் தூக்கி வந்து அடித்து விட்டே திரும்புவாள்.

ஒருநாள் இரண்டு பேரும் தூக்கயட்டுக் கொண்டு கோப்பாயில் ஒரு அப்புவின் வாழைத்தோட்டத்திற்குள் சென்றோம். நான் முதலில் சென்று கனைத்து போட்டு, "அப்பு தண்ணி தாவன்" என்று வாயில் குடித்துக் கொண்டிருக்க, இவளும் கனைத்து போட்டு வந்தாள். "எனக்கும் தண்ணி தா மணி" என்றாள். நானும் தண்ணீரைக் கொடுத்துப்போட்டு "எனக்கு அடிக்காதை மாலதி" என்றேன். அவள் சிரித்துவிட்டு, "நான் போகுப்போவன்" என்றாள்.

கோப்பாய் பாலத்தடியில் அடிக்கடி உலங்குவானூர்தி தாழப் பறக்கும். அந்நேரங்களில் நாம் கிறோசரடிக்கு விரைந்து செல்வோம். இவ்வேளைகளில் மதில்களைப் பாய்ந்து, பாய்ந்து கிறோசருக்கு முதலில் செல்வது மாலதிதான். மாலதி மதில் பாய்வதில் சரியான கெட்டிக்காரி. "இந்தா பார் போறன்" என்றால் அடுத்த நிமிடம் மதிலுக்கு அங்கால் நிற்பாள்.

எங்களுக்குக் 'கொக்கக்கோலா குடிக்கக் கூடாது' என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. மாலதிக்கு கொக்கக்கோலா என்றால் சரியான பிரியம். கொக்கக் கோலா குடிக்கக் கூடாது என்று தடை விதித்த இரண்டாம் நாள் மாலதி என்னிடம், "வாடி கல் பருக்கப் போவம் வருகோ" என்றாள். எனக்குத் தெரியும், இவள் கூப்பர் என்றால் கொக்கக்கோலா தான் குடிப்பாள் என்று. நான் "வரமாட்டன்" என்றேன். "நீ வா கொக்கக்கோலா குடிக்கக் கூடாது வேறு ஏதாவது குடிப்பம்" என்றேன். அதற்கும் வெளியில் செல்வதற்கும், சாதாரணமாகவாகனத்தான் வடை விற்று செல்வோம். கடைக்குள் சென்று மாலதி இரண்டு பன்சாவுக்கும் இரண்டு கொக்கக்கோலாவுக்கும் சொன்னாள். "ஏன் மாலதி" என்றேன் சிரித்துக்கொண்டே. "பன்சாவை மேசையில் வைத்து விட்டுக் கொக்கக்கோலாவைக் குடிப்போம்" என்றாள். "என்ன மாலதி விரர்க்காத கதைக்கிறாய். எங்களை மட்டுமே கொக்கக்கோலா குடிக்க வேண்டாம் என்றார்கள். குடித்துக் கொண்டிருக்கையில் பாரவது எங்கட ஆட்கள் வந்தால் என்ன செய்கிறது" என்றேன். "இண்டைக்கு மட்டும் குடிப்போம். இனிமேல் குடிக்கவே வேண்டாமடி" என்றாள். சரியான மேசையில் அமர்ந்தோம். "முதலில் பன்சாவை எடுத்து, அரைவாசியைக் குடித்துவிட்டு மேசை மீது வைத்துவிட்டு, பின் கொக்கக் கோலாவைக் குடி" என்றாள். இடையில் எதிர்பாராத விதமாக எமது ஏழுபேர் ஒருவர் வந்தார். நாங்கள் இருவரும்

தொடர்சி 7ம் பக்கம் .....

வரலாற்றில் முதல்...

கொக்கக்கோலாவைத் தன்னி வைத்து விட்டு, பன்ராவைக் குடித்துக் கொண் டிருந்தோம். அவர் சென்றபின் மீண்டும் கோக்கக்கோலாவைக் குடித்துவிட்டு வெளியில் வந்ததும், மாலதி சொன் னாள், "எப்படி மணி என்னுடைய இடியா?" என்று. பின் இரவு பொறுப்பா ளரிடம் நடந்ததை மாலதி கூறி, தனக் குத் தண்டனை தரும்படி கேட்டாள். இந்தச் சம்பவம் நடந்தது 1987-10-9 இல்.

மாலதி எவ்வளவு குழப்படிகளையும், குறும்புகளையும் செய்தாலும் இவளிடம் வீரமும், விவேகமும் நிறைந்து காணப் பட்டது. இவள் எவ்வளவு குறும்புகள் செய்தாலும் இவளுக்கென கொடுக்கப்ப டுகின்ற வேலைகளை அழகாக, முழு மையாக, நிறைவாகச் செய்து முடிப் பாள்.

கடைசி நாள்

1987-10-10 இல்
காலையிலேயே தலையில் தோய்ந்து விட்டு வந்த மாலதி, சமையல் அறைக் குச் சென்று சாப்பிட்டு வந்தாள். நானும் ஏற்கனவே தலையில் தோய்ந்து எனக் குப் பிடித்தமான ஜீன்ஸ், சேட் போட் டிருந்தேன். மீனுடன் சாப்பிட்டு வந்த மாலதி எதிர்பாராத விதமாக எனது சேட்டில் கையைத் துடைத்துவிட்டாள். எனக்குப் பேச வார்த்தையின்றி அவள் மேல் தப்பிவிட்டேன். அந்நேரம் எனக்கு மாலதி அடிக்கவில்லை. மீண் டும் போய்க் குளித்துவிட்டு வந்தாள். நான் அவளை என்னுடன் கதைக்க வேண்டாம் எனக் கூறிவிட்டேன்.

அன்று காலையிலேயே எமக்கெல்லாம் புதிய ஆயுதங்கள் கொண்டு வந்து தரப் பட்டன. மாலதிக்கு எம் -16 ஆயுதம் கொடுக்கப்பட்டது. மாலையில் எங்களை ஏற்ற வாகனம் வந்தது. அதில் எங்க ளுடைய சூழலை உற்றுப்பு பைகளுடன் ஏறச் சொன்னார்கள். நாங்கள் தயாரா னபோது ஒரு சின்னப் பிரச்சினை எழுந் தது. எமது சூழலில் நான்கு எம் -16 இருந்தது. எம் -16 உடன் உள்ள ஒரு வரை வேறு சூழலுக்குப் போகும்படி பணிக்கப்பட்டது. இதில் இரண்டு பேர் சூழத் தலைவிகள். ஒருவர் மருத்துவம் செய்பவர். ஆகவே மாலதிக்கே அடுத்த சூழலுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. "போகமாட்டேன்" என்ற மாலதி, பின் பொறுப்பாளரின் கட்ட ளைக்குப் பணிந்து அடுத்த சூழலுடன் நிற்கச் சம்மதித்தாள்.

வாசலில் கண்ணீர் மல்க மாலதி நின் றுகொண்டிருந்தாள். நாங்கள் எமது உடைப் பைகளுடன் வாகனத்தில் ஏறிக் கொண்டிருந்தோம். நான் என்னுடன் கதைக்க வேண்டாம் என்ன தால், மாலதி எனக்குக் கிட்ட வர வில்லை. வாகனம் புறப்படத் தயாரான போது, நான் மறந்துபோய் விட்ட எனது சப்பாத்தை எடுத்துக் கொண்டுவந்து தந்த மாலதி, "என்னோடு கதைக்க மாட்டியா மணி?" என்றாள். "இல்லை. நான் கதைப்பேன். கோபத்தில்தான் அப்படிச் சொன்னேன்" என்றேன். நாங் கள் சண்டைக்குத் தயாராகிறோம் என் பது எமக்குத் தெரியும். மாலதி சொன் னாள் "கவனமாக, நல்லா அடிபடு மணி. இருவரும் உயிருடன் இருந்தால் மீண்டும் சந்திப்போம்" என்றாள். இது தான், மாலதி பிரியின் தூரத்தோடு சொன்ன உறுதியான வார்த்தைகள். இறுதியாக நான் கண்ட மாலதியில் குறந்தைத் தனம் தெரியவில்லை. மாறாகப் போருக்குத் தயாரான கம்பீர மான படைவீரனின் சாயல் அவள் முகத் தில் படிந்திருந்தது. நாங்கள் மாலதிக் குக் கை அசைக்கவும், எங்களை ஏற் றிய வாகனம் அவள் கை அசைத்தபடி நிற்க, பறந்து சென்றது.

மாலதியைப் பிரிந்த கவலை எனக்கு மட்டும் இருக்கவில்லை, எங்கள் சூழ வுக்கே இருந்தது. ஏன் என்றால், அவள்தான் எங்கள் சூழலில் கலகலப் பானவள். பயிற்சிப் பாசறையில் இருந்து ஒரே சூழலில் இருந்த எங்களுக்கு, பிரிவு என்று வந்ததும் மிகவும் கடின மாக இருந்தது. வாகனம் போய்க் கொண்டிருந்தது. என் மனம் வாகனத் தைவிட வேகமாக ஓடிக்கொண்டிருந் தது. என் உள்ளுணர்வு கூறியது, நான் மாலதியை பிரிந்தது மாலதி வீடு வேண் என்று.

1987-10-10 அன்று தன்னிரவில்.....

கோப்பாயில் எம்மவருக்கும், இந்திய இராணுவத்திற்கும் இடையே கண்மூடித் தனமான தொடங்கியது. செய்தி தொலைத்த தொடர்பில், எண்ணிக்கை யின் செய்திகளையும், பணியுரைகளையும், கட்டளைகளையும் பொறுப்பாளருடன் இருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். திடீரென தொலைத் தொடர்பில் ஒரு குழு, இன்னொரு குழுவுக்குப் 'பெண் போராளி ஒருவர் வீரச்சாவு' என்ற செய் தியைத் தெரிவித்தது. எனக்கு ஒரு மாதிரி இருந்தது. நீண்டநாள் நட்பு வால் மனம் சொன்னது. "ஆண்டவரே மாலதியாக இருக்கக்கூடாது" என்று பொறுப்பாளரைக் கரைச்சல் பண்ணி னேன். "பெயர் என்ன என்று தொடர்பு எடுத்துக் கேளுங்கோ, கேளுங்கோ" என்று. திடீரெனத் தொலைத் தொடர்பு வீரச்சாவடைந்தது மாலதி என்ற செய் தியைத் தாங்கி வந்தது.

நானோ, என்றுமே சந்தித்திராத அதிர்ச் சியைச் சந்தித்தேன். ஏனெனில், பெண் போராளிகளில் முதல் முதலில் இவளின் இழப்பைத்தான் நான் சந்தித்தேன். 'ஓ' என்று பெரிதாக, நான் எங்கே நிற்கி றேன் என்ற நினைவு கூட இல்லாமல் அழுதேன். பொறுப்பாளர் சிறிது நேரத் திற்குப் பின் என்னை ஏசினார். "எங்கே நிற்கிறாய் என்று தெரியாமல் என் இப் படி சத்தமாய் அழுகின்றாய்" என்று. என்றமே பொறுப்பாளரை எதிர்த்துக் கதைக்காத நான், மாலதியின் பிரிவால் அன்று பொறுப்பாளரையே எதிர்த்துக் கதைத்துவிட்டேன்.

மாலதி தினமும் சொல்வாள், பெண்பு லிகளில் நான்தான் முதல் வீரச்சாவு அடையேன் என்பாள். அவள் சொன் னதைப் போலவே, மாலதியே விடுத லைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் முதல் பெண்புலியாக, புரட்சிப் பெண் ணாக சரித்திரநாயகி ஆகிவிட்டாள்.

நானும், மாலதியும் கோப்பாயில் கிறே ரடி என்னும் இடத்தில் நடந்து திரி வோம். அவள் எதிரியை எதிர்கொள்ளக் காத்திருந்த, நடையின்ற, சூறும்புத் தனங்கள் செய்த அதே இடத்தில் எதிரி யின் குண்டை ஏந்தி, சரித்திர நாயகி யாகச் சரித்தாள். இவள் உலாவிய, இவள் சரித்திர நாயகியாகச் சரித்த அதே இடத்தில் அவளுக்காகக் கட்டப் பட்ட கல்லறை நிமிர்ந்து. அவளின் வீரத்தை பகைமையான அவளின் நினை வுகளை உணர்த்தி நிற்கிறது.

இப்படித்தான் மாலதி வீரச்சாவைச் சந் தித்துக் கொண்டாள். அன்று இரவு தோப்பாய் அதைச்சுற்றி வீதிகளை வரும் வாகனங்கள் அனைத்தையும் மறித்து செய்யும்படி மாலதி தின் சூழவினரிடம் பணிக்கப்பட்டிருந்தது. எல்லோருமே காவற்கடமையில் நிற்கும் போது வருகின்ற வாகனம் ஒவ்வொன் றையும் பரிசோதனை செய்து அனுப்பி னார்கள்.

கோப்பாய்ச் சுடலையடியில் மாலதி காவற்கடமையில் நின்றபோது, வாகனங் கள் வந்திருக்கின்றன. ஒடிச்சென்று வாகனத்தை மறித்திருக்கிறாள். மாலதி மறித்தது இந்திய இராணுவத்தின் ஆட் கார்களை. திடும் திடுமெனக் குதித்த இராணுவத்தினர் ரவைகளைக் கண்ட மாட்டில் அடிக்கத் தொடங்கினர். மால திலும் எதிர்த் தாக்குதலைத் தொடுத் தாள். பின் எமது எல்லாக் குழுவினரும் மாலதியின் பக்கம் சென்று சண்டையில் இறங்கினர். எதிர்பாராத விதமாக ஏராளமான இராணுவத்தினர் எம்மவரு குமுவைச் சுற்றி வளைத்தனர். தாக்கு தலைத் தொடுத்தனர். இவ்வேளையில் மாலதி படுகாயமடைந்துவிட்டாள். காயமடைந்தவளைத் தோழிகள் தூக்கி வரும்போது மாலதி "எல்லோரும் வீணாகச் சாக வேண்டாம். என்னை விட்டுவிட்டு என்னை 16ஐ (ஆயுதம்) கொண்டு நீங்கள் ஓடுங்கோ" என்றிருக் கிறாள். தோழிகள் "இல்லை. நாங்கள் உன்னைக் கொண்டு போகின்றோம்." என்று கூறிய அடுத்த நிமிடமே மாலதி சயனைட்டைக் கடித்துவிட்டாள். ஏனென்றால் இராணுவத்தினர் சுற்றி வளைத்துவிட்டனர். கோப்பாய் கிறே ரடியில் மாலதி தன்னை அர்ப்பணித் தாள். ஆயின் சுற்றிவளைப்பால் மாலதியின் ஆயுதத்தைதான் முதலில் கொண்டு வந்தார்கள். மாலதி சொன னதுபோல், அடுத்த நாள்தான் மாலதி யின் புகழுடலை மீட்டெடுத்தார்கள்.

இப்படித்தான் ஒவ்வொரு போராளிகளும் எங்களின் சொந்த மண்ணில் விடியலுக் காகத் தங்களை அர்ப்பணித்துக் கொள் கின்றார்கள். எல்லாப் போராளிகளும் தங்கள் உயிருக்கும் மேலாகத் தங்களின் ஆயுதங்களைத் தான் நேசிக்கின்றார் கள். இந்த வரிசையில் மாலதி யும்..... கோப்பாய்க் கிறேரடியில் மாலதியின் பலமான நினைவுகளைத் தாங்கி நிற்கும் அவளது கல்லறைக்கு அடிக்கடி என் கால்கள் விரைவும். அங் கிருந்து நான் திரும்புவது, உரோமிய உறுதியான போராட்ட உணர்வோடு மட் டுமே.....

நன்றி: 'சுதந்திரப் பறவைகள்'

நிகழ்வும் நினை...

Meanwhile, the Sinhala owned Sri Lanka Sunday Times (24 October 1993) reported that in the Sri Lanka Parliament, TULF's Kandiah Navaratnam reminded the government that they Tamils had always voted for the UNP and now the UNP was arresting the children of those supporters! It was the familiar TULF **'beggars style'** and got the customary Sinhala response. The Sinhala Deputy Speaker, Gamini Fonseka sternly warned Mr.Navaratnam: **'I don't think that Tamil ladies and gentlemen in Colombo are being harassed in any way. Don't add fuel to fire.' Mr.Navaratnam presumably got the message: When Tamils complain of fire, they add fuel to the fire.**

A VIEW FROM THE ENEMY'S CAMP

"One of the biggest threats to Western aid and investments has been this decade-long conflict which has caused questions of violation of human rights being raised against this country..... In this context we have to admit the failure of our Foreign Ministry to make any significant progress in combating anti-Sri Lanka propaganda by the LTTE despite the many embassies and diplomats we maintain at tremendous cost in the Western world. For example when the Kilali operation was in progress, CNN suddenly put out a programme on the Eelam War.... It was almost an LTTE presentation beamed through out the world. While it spoke volumes for LTTE propaganda, we wonder whether our publicity officers even saw the telecast! If after ten years, our foreign service cannot match the propaganda of the LTTE, shouldn't there be rethinking in maintaining missions abroad at such cost to the Sri Lankan tax payers." *(Editorial Comment, Sinhala owned Sri Lanka Sunday Island, 24 October, 1993)*

"Opposition (SLFP) member Anuraddha Ratwatte said that the Yal Devi (offensive) had failed because the LTTE had resumed boat operations within a week after the army operation. 'We claimed that the boat yard was destroyed but the LTTE resumed boat operations immediately. 114 (Sinhala) soldiers died in vain,' he said." *(India Abroad, 29 October 1993)*

"Morale boosting statements issued for the benefit of the public must not be confused with an ability to effect a 'military solution' to the conflict by winning the war." ***Christian Worker Quarterly***

Tamil Eelam Archive

Book Release

INDICTMENT AGAINST SRI LANKA

The gross, systematic and continuing violations of the rights of the Tamil people, by the Sri Lankan government and its agencies, have been well documented by innumerable reports of human rights organisations and independent observers of the Sri Lankan scene.

The Legal and Human Rights Division of the International Secretariat of the Liberation Tigers of Tamil Eelam has brought together extracts from some of these reports in a publication entitled "Indictment against Sri Lanka". The book is priced at £10 (inclusive of postage), and is available for purchase by mail order from IFT, 17, Birchview Close, Yateley, Camberley, Surrey GU17 7DL

This 126 page book is an invaluable addition to the armoury of all human rights activists engaged in furthering the Tamil cause - a cause which was described by one such activist in 1984 as being 'the very essence of the cause of human rights and justice'.

"யாழ்தேவி" இராணுவ நடவடிக்கை ஒரு தோற்றுப்போன முற்றுகை முயற்சி

"சிறீலங்கா அரச படைகள், அண்மையில் பெரும் பிரயத்தனத்துடன் மேற்கொண்ட யாழ் தேவி இராணுவ நடவடிக்கை மடத்தனமானதும், அர்த்தமற்ற தாகும்" என முன்னாள் சிறீலங்கா விமானப்படைத் தளபதி கறி குணதிலக குறிப்பிட்டதில் இருந்தே, இந்நடவடிக்கையில் சிறீலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட பாதிப்பினைப் புரிந்து கொள்ள முடியும்.

இதேவேளை, யாழ்தேவி இராணுவ நடவடிக்கை பெரும் பிரயத்தனத்துடன் ஆரம்பிக்கப்பட்டது என்பதை வலியுறுத்த, இந்த நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்ட படையினரின் எண்ணிக்கை, இராணுவத் தளபாடங்களின் தொகை, இரகசியம் பேண எடுத்துக் கொண்ட முயற்சி என்பவையே போதுமானதாகும்.

இந்த யாழ்தேவி நடவடிக்கையில் 10,000 க்கும் அதிகமான துருப்பினர் பங்கு கொண்டனர். -ஆனால், சில சிங்களப் பத்திரிகைகள் -லங்கா தீப போன்றவை -20,000 துருப்புகள் பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கின்றன. இதேவேளை, சிறீலங்கா இராணுவம் இம்மோதலில் பயன்படுத்தியது போன்ற வேறு எந்த மோதலிலும் கனரக வாகனங்களைப் பயன்படுத்தவும் இல்லை. சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதங்கள் உடனடியாகவே கப்பலில் இருந்து இறக்கப்பட்டு, யுத்த முனைக்கு அனுப்பப்பட்டதாகவும் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்திருந்தன. அத்தோடு ரஸ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட எம்.ஐ.-17 ரக உலங்கு வானூர்திகளும் களத்தில் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாறான, பிரயத்தனங்களின் மத்தியில் ஆனால், இரகசியமாக மேற்கொள்ளப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கையின் நோக்கம், தற்போது இராணுவத் தளபதிகள் தெரிவிப்பது போன்று, கிளாலி இறங்குதுறையில் இருந்த கடற்புலிகளின் தளத்தை அழிப்பதோ, அன்றி மக்களின் போக்குவரத்திற்குப் பயன்படுத்துவதற்கு நின்றிருந்த நூற்றுக்கணக்கான படகுகளை அழிப்பதோ அல்ல. இதன் பிரதான இலக்கு, சாவகச்சேரியைப் பிடிப்பதாகும். இதன் மூலம் யாழ் குடாநாட்டு முற்றுகையை முழுமைப்படுத்துவதாகும்.


அதாவது, ஆனையிறவு முகாமிலிருந்து சாவகச்சேரி வரையுள்ள சுமார் 20 மைல் -32 கி.மீ. -நீளமான பிரதேசத்தைக் கைப்பற்றுவதாகும். இதன் மூலம் யாழ் கடல் நீரேரியின் வடபகுதியை முற்றாக, இராணுவத்தின் ரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் திட்டமிடப்பட்டது. இது யாழ் குடா நாட்டின் தென் மேற்குப் பகுதியான வெற்றி நிலைகேணி, கட்டைக்காட்டுப் பகுதியில் இருந்து இயக்கச்சி - ஆனையிறவு வரைக்கான சாவகச்சேரி வரையான ஒரு நீண்ட ஒடுங்கிய பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் ஆனது ஆகும். இதனை யாழ்ப்பாண முற்றுகையின் இறுதிக் கட்டம் எனக் கொள்ளலாம்.

இதன் பிரகாரம், ஒப்பரேசன் யாழ்தேவி நடவடிக்கையின் போது இராணுவம், ஆனையிறவு இயக்கச்சிப் பகுதியில் இருந்து ஒரு ஒடுங்கிய வழி ஊடாக சாவகச்சேரி வரை முன்னேறுவது எனத் திட்டமிடப்பட்டிருந்தது. நகரும் இப்படை அணியின் தென் எல்லையாக யாழ் கடல் நீரேரியும், வட எல்லையாக சாவகச்சேரியில் இருந்து புலோப்பளை வரை செல்லும் கச்சாய் வீதியும் அமைவதாகத் திட்டமிடப்பட்டிருந்தவேளை ஆனையிறவுப் பகுதியில் -குறிஞ்சாத் தீவுப் பகுதியில் -இருந்து ஆரம்பமாகி, சாவச்சேரி வரை கரை ஓரமாகக் காணப்படும் மணற்பாங்கான வண்டிப் பாதையே, இராணுவ அணி நகரும் பிரதான மைய வீதியாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இவ் இராணுவ அணி, யாழ் கடல் நீரேரியின் கரையோரத்தில் இருந்து 500 -1000 மீற்றர் வரையிலான அகலத்தில் பரந்து செல்வதாகவும் திட்டமிடப்பட்டிருந்தது. இடையிடையே இராணுவ அணி கச்சாய் வீதியைத் தொட்டுச் செல்வதாகவும், ஆனால் பெரும்பாலும் கச்சாய் வீதியைத் தவிர்த்து முன்னேறுவதே நோக்கமாகவும் இருந்தது. இத்திட்டத்தின் பிரகாரம் முன்னேறிய இராணுவ அணியே இரண்டாம் நாள் -செப்டெம்பர் 29 ம் திகதி, புலோப்பளைக்கு அல்லிப்பளைக்கும் இடையில் கரையோரத்திற்கு அண்மையாகப் புலிகளின் கடும் தாக்குதலுக்கு உள்ளாகிப் பேரிழப்பைச் சந்தித்தது.

இத்தாக்குதல் திட்டத்தின் பிரகாரம், யாழ் குடாநாடு பூரண முற்றுகைக்கு உள்ளாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனையிறவில் இருந்து சாவகச்சேரி வரை அமைக்கப்படும் இராணுவ வேலியானது, யாழ் கடல் நீரேரியின் வட கரையோரத்தில் உள்ள சகல இறங்கு துறைகளையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் என இராணுவம் கருதியது. அதாவது கிளாலி, கச்சாய் இறங்குதுறைகள் பூரண கட்டுப்பாட்டுக்குள் வரும் என எதிர்பார்க்கப்பட்டது. இதன் மூலம் யாழ் கடல் நீரேரியில், கடற்புலிகளின் நடமாட்டத்தை பூரணமாகக் கட்டுப்படுத்தத் திட்டமிடப்பட்டது. மேலும், மண்டைதீவுக்கும் கல்முனைக்கும் இடைப்பட்ட ஒடுங்கிய கடற்பரப்பைக் கடற்படைப் பீரங்கிப் படகுகள் மூலம் காவல்புரிவதன் மூலம், யாழ் குடாநாடு முற்றாகப் பெரு நிலப்பரப்பில் இருந்து துண்டிக்கப்படுவதோடு பூரண முற்றுகை நிறைவாகும் எனக் கருதப்பட்டது.

இம்முற்றுகை நிறைவு செய்யப்படும் பட்சத்தில், இம்மாரி காலம் முடிவும் வரை பொறுத்திருந்துவிட்டு அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில், யாழ் நகர் மீதான தாக்குதலை தொடுப்பதுவும் என்பதே, இராணுவத்தின் இலக்காக இருக்கலாம் என்பதே இராணுவ விமர்சகர்களின் எதிர்பார்ப்பாகும். இம்முன்று அல்லது நான்கு மாத முற்றுகை காலத்தில் புலிகளின் நடமாட்டம் பூரணமாகக் கட்டுப்படுத்தப்படும் பட்சத்தில், அவர்கள் பெருமளவில் பலவீனப்படுவார்கள் என்பதோடு அரசாங்கமும் பொருளாதாரத்தடையை மேலும் தீவிரமாக்குவதன் மூலம், மேலும் விடுதலைப் புலிகள் மீதும், தம்மீது மக்கள் மீதும் நெருக்குதலைத் திணிக்கலாம் என எதிர் பார்க்கப்பட்டது. அதாவது இக் காலம் பத்திரிகைகளால் கொண்டாடப்பட்டபோது, சிறீலங்கா அரசுத்தலைவர் சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தை நெரிக்கும் ஒரு காலப் பகுதியாகவும், 1994 கோடை காலம் அழித்தொழிக்கும் காலமாகவும் கருதப்பட்டது.



- ஜெயராஜ் -

இவ்வாறாக, யாழ் குடாநாட்டு முற்றுகையை நிறைவு செய்யும் நடவடிக்கையே 'ஒப்பரேசன் யாழ்தேவி' எனப் பெயரிப்பட்ட திட்டமாகும். ஆனால், இத்திட்டம் 29 ஆம் திகதி நடந்த புலோப்பளைச் சமருடன், பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியது. இராணுவத்திற்கு புலோப்பளையில் ஏற்பட்ட பேரிழப்பானது, இராணுவத்தின் முன்னேற்றத்தை கிளாலி இறங்குதுறைக்கு அப்பால் நகர்த்திச் செல்ல முடியாது ஆக்கிற்று. இதேவேளை, கிளாலி இறங்குதுறைப் பகுதியில் தரித்து நிற்க முடியுமா என்ற கேள்வியும் பாதுகாப்பு அமைச்ச மட்டத்தில் உருவாக்கியது.

இராணுவத் தரப்பில் இவ்வான கேள்வி எழுப்புவதில் நியாயம் இல்லாமலும் இல்லை. காரணம் என்னவெனில், யாழ் தேவி நடவடிக்கை திட்டமிட்டவாறு முழுமை பெறவில்லை. இரண்டாவது, யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் ஏற்பட்டபடிப்பினைகளும். அதாவது முன்னால் விமானப்படைத் தளபதி கறி குணதிலக, 'யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்திற்கு ஏற்பட்ட இழப்புகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பலத்தையும், உறுதிப்பாட்டையும் இராணுவம் விளங்கிக் கொள்ளத் தவறிவிட்டது' எனச் சுட்டிக் காட்டிய தவறை பின்னர் இராணுவம் உணர்ந்திருக்க வேண்டும்.

அதாவது, கடந்த ஆண்டில் பல தோல்விகளைச் சந்தித்த இராணுவம், கிளாலியைக் கைப்பற்றியை பெரும் வெற்றியாக சில கனம் பெரிதாகவும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பாதிப்புகளை மிகச் சிறியதாகவும் கொண்டாடப்பட்டபோது, சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சோ அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து கலங்கிப் போய்க் கிடந்தது.

ஒப்பரேசன் யாழ்தேவி நடவடிக்கை பூரணப்படுத்தப்படாமல், கிளாலியில் தரிப்பதன்பது தற்கொலைக்கு ஒப்பானது என்றே இராணுவ வட்டாரங்களில் பரவலாகக் கருதப்பட்டது. இதற்குக் காரணங்களும் உண்டு. இவற்றில் முக்கியமானவை, கிளாலியில் தரித்து நிற்கும் இராணுவத்திற்கு விநியோகம் தொடர்பானதும் பாதுகாப்பு தொடர்பானதுமாக இருந்தது.

அதாவது, கிளாலியில் தரித்து நிற்கும் இராணுவம், அதேகாலம் விடுதலைப்புலிகளின் நகர்வுகளுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருந்திருக்கும். ஏனெனில் கடல் நீரேரி மேற்குவாற்றிற்கு தளபாடங்கள் இம்முகாமை புலிகள் அடிப்படுத்த முனைவதில் ஆச்சரியம் கொள்வதற்கு எதுவுமில்லை. இத்தகையில், இராணுவத்தின் பாதுகாப்புக் அதாவது கிளாலி இராணுவ முகாமின் பாதுகாப்புக் கும் உத்தரவாதம் தேவையாக இருந்தது யாழ்தேவி இராணுவ நடவடிக்கை முற்றுப்பெறாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டதால், இப்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் சிக்கல்கள் எழுந்தன.

கிளாலியில் இராணுவம் தரித்து நிற்குமாயின், ஆனையிறவு முகாமில் இருந்து சுமார் பத்து மிலோ மீற்றர் தொலைவில் உள்ள இம்முகாமின் விநியோகம், பெரும் பிரயத்தனம் மிக்கதொன்றாகவே இருக்கும். ஆனையிறவில் இருந்து தரைவழியாக விநியோகம் மேற்கொள்ளப்படுவது என்பது மீண்டும் ஒரு பத்துக் மிலோ மீற்றருக்கான இராணுவ வேலியொன்றை அமைக்க வேண்டிய நிலைமை உருவாக்குவதாகும். இவ் இராணுவ வேலியின் பாதுகாப்பு என்பது, பெரும் சிரமம் மிக்கதொன்றாகவே இருக்கும்.

மேலும் தொடரப்போகும் எதிர்களில் பருவ மழை ஆரம்பிக்கும் காலம், தரைவழி விநியோகப் பாதை என்பது மிகவும் சிரமம் மிக்கதாகவும், சிலவேளை துண்டிக்கப்படக் கூடிய அபாயமும் உண்டு. இத்தினையில் கடல்வழி விநியோகமும் இருப்பதாகவும் மேற்கொள்ளப்படக் கூடிய சாத்தியப்பாடு இருப்பதாக இல்லை.

இதில் யாழ் கடல் நீரேரிப் பகுதி, கடல் வழி விநியோகத்துக்கான ஆழமான கடற்பரப்பைக் கொண்டிருக்கவில்லை என்பது முக்கியமானதாகும். பெரும்பாலும் கடற்படையினரால் கடல் நீரேரிப் பகுதியில் பயன்படுத்தப்படும் சிறிய வகைப் படகுகள் பெரும் தொகைத் தூரப் பிரதேசத்தை கண்காணிப்பதற்கான ரேடார் வசதிகளுக்கான எதுவித ஏற்பாடுகளும் இல்லை. அதேவேளை ஆழம் குறைந்த கடற்பரப்பில் மற்றைய பெரிய படகுகள் செல்வதற்கான வாய்ப்புக்களும் இல்லை. மேலும் கடற்படையினரிடம் போதிய கடற்படைப் படகுகளும் இல்லை.

இதேவேளை, கடல் நீரேரியில் உள்ள கச்சாய் போன்ற இறங்குதுறைகளை விடுதலைப் புலிகள் பயன்படுத்த முடியாதவகையில், சிறீது வினைப்படுத்தல் என்பதனால் செய்யப்படும் விநியோகத்தையும் கடற்புலிகளால் கட்டுப்படுத்த முடியும். இதிலையில் கிளாலி இராணுவ முகாமின் கழுத்து, விடுதலைப் புலிகளால் நெரிக்கப்படுவது தவிர்க்க முடியாது போய்விடும்.

இதேவேளை, விடுதலைப் புலிகளிடம் புலோப்பளைச் சமரில் சிறீலங்கா இராணுவம் படித்த முன்பாட முடிவும் கற்பனாதாகும். இச்சமரில் விடுதலைப் புலிகள் மேட்டுநிலத்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

சுதந்திர கியூபெக் நாட்டுக்கு துவக்க விழா!

Canada "One Country, Two Nations"

1993ம் ஆண்டு ஐப்பசி 25ம் நாள் நடந்து முடிந்த பொதுத்தேர்தல் கனடாவின் அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகவும், கனடாவின் தலைவிதியை முற்றாக மாற்றிய எழுதுகோலாகவும் அமைந்துவிட்டது. கடந்த 9ஆண்டுகள் ஆட்சிசெய்த முற்போக்கு பழமைவாதக்கட்சி (Progressive Conservative Party) இரண்டு ஆசனங்களைமட்டும் கைப்பற்றி படுதோல்வி அடைந்ததை நான் குறிப்பிடவில்லை. அல்லது கிழக்குக் கரையிலிருந்து மேற்குக் கரை வரை தூறாவளி போல் வீசி 178 தொகுதிகளைக் கைப்பற்றி வெற்றிவாகை சூடி ஆட்சிக் கதிரையில் அமரப் போகும் லிபரல் கட்சியின் சாதனையை நான் குறிப்பிட வில்லை.

நான் குறிப்பிடுவது கியூபெக் மாகாணத்தின் 75 தொகுதிகளில் 49.5 வீத வாக்குகளைப் பெற்று 54 ஆசனங்களைக் கைப்பற்றி யிருக்கும் புளொக் கியூபெக் (Bloc Quebecois) கட்சியின் அபார வெற்றியை. **கியூபெக் மாகாணத்தின் பெருந்தொகையான ஆசனங்களைக் கைப்பற்றியது மட்டுமல்ல. கனடா பாராளுமன்றத்தில் மேன்மை தங்கிய மகாராணியாரின் எதிர்க் கட்சியாகவும் புளொக் செயல்படப் போகிறது.**

கனடாவிலிருந்து பிரிந்து சுதந்திர கியூபெக் அரசை உருவாக்க முயற்சிக்கும் ஒரு கட்சி, பாராளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு மாற்றுக்கட்சியாக இருப்பது **கனேடியர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது.** ஆனால் கனேடிய ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரில் இந்தக் கட்சி பெரிய புதுமையாக இருக்கமுடியாது. காரணம் இதேகாட்சியை இலங்கையில் 1977ம் ஆண்டு நடந்தேறிய பொதுத்தேர்தலில் பார்த்திருக்கிறோம்.

ஆளும் கட்சியாக இருந்த சிறி லங்கா சுதந்திரக்கட்சி, 147 தொகுதிகளில் போட்டியிட்ட 8 தொகுதிகளில் மட்டும் வெற்றி பெற, 24 தொகுதிகளில் போட்டியிட்டு 18 தொகுதிகளைக் கைப்பற்றிய தமிழர் விடுதலைக் கூட்டு முன்னணி, பிரதான எதிர்க்கட்சியாகப் பாராளுமன்றத்தில் விற்றிருந்தது. பொதுத்தேர்தலில் சுதந்திர, இறைமை யுள்ள, மதசார்பற்ற, சோசலிச தமிழீழத்தை உருவாக்கப் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு, ஆணைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் அமிர் தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராணார். தமிழர்களிடம் யாசித்துப் பெற்ற ஆணை மறக்கப்பட்டதும், தமிழீழக் கோரிக்கை புதைக்கப்பட்டதும் இன்று கனவாய், பழங்கதை யாய்ப் போய்விட்டது.

இப்போது நடந்து முடிந்த பொதுத்தேர்தல், சுதந்திர கியூபெக் அரசுக்குப் போடப்படும் அத்திவாரம் என்று புளொக் கியூபெக் கட்சித்தலைவர், லூசியான் பூசார்ட் (Lucien Bouchard) பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். இதைப்படுத்து, அடுத்த ஆண்டு 1994ல் நடை பெற இருக்கும் கியூபெக் மாகாண பாராளுமன்றத் தேர்தலில், கியூபெக் சுதந்திரத்தைக் கோரும் இன்னொரு கட்சியான கியூபெக் கட்சி (Parti Quebecois) ஆட்சியைப் பிடிக்க, புளொக் கியூபெக் கட்சி உதவி செய்யும்.

கடைசிக் கட்டமாக 1995ல் ஒரு நேரடி வாக்கெடுப்பு (Referendum) நடைபெறும். அந்த வாக் கெடுப்பில், 50 வீதத்திற்கு மேலான மக்கள் ஒரு சுதந்திர கியூபெக் உருவாகுவதற்கு சம்மதம் தெரிவிக்கும் பட்சத்தில் கியூபெக் நாட்டின் சுதந்திரம் பிரகடனப்படுத்தப்படும்.

இந்த மூன்று கட்டங்களையும் அல்லது கண்டங்களையும் வெற்றிகரமாகத் தாண்டினால் கியூபெக் மக்கள் கனேடியப் பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் ஒன்றில் கலந்துகொண்டு வாக்களிப்பது இதுவே கடைசித் தேர்தலாக இருக்கும். கியூபெக் தேர்தலில் 54 தொகுதிகளைக் கைப்பற்றி யிருக்கும் புளொக் கியூபெக் கட்சித் தலைவர், எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் அவருக்காக ஒதுக்கியிருக்கும் உத்தியோக வாசஸ்தலத்தில், தான் இருக்கப் போவதில்லை என்று ஏற்கனவே அறிவித்திருக்கிறார். (இதற்கு எதிர்மாறாக சிறிலங்கா அரசு ஒதுக்கிய உத்தியோக வாசல் தலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் குடியுருந்தது ஒப்பிடத் தக்கது.

அது மட்டுமல்ல, கனேடியப் பாராளுமன்றத்தின் ஊடாக கியூபெக் பிரச்சனை மக்களுக்கு இருக்கும் கவனமும் **கியூபெக் சுதந்திரத்திற்கு** போதேல்லாம் வலியுறுத்து போவதாக பூசார்ட் கூறியிருக்கிறார்.

இவையெல்லாவற்றிக்கும் மேலாக கனடா ஒரு நாடு, அதில் இரண்டு தேசத்தார் (Nation's) இருக்கிறார்கள் என அறிவித்திருக்கிறார். கியூபெக் தேசத்தாருக்கு சுயநிர்ணய உரிமை உண்டென்றும், அது எனைப்பாவித்தே கியூபெக் தனிநாடாக மலரும் என்றும் அறிவித்திருக்கிறார்.

1990ம் ஆண்டு மீச் லேக் ஒப்பந்தம் (Meech Lake Accord) 1992ம் ஆண்டு சாலட் டவுன் ஒப்பந்தம் (Charlotte Town) கனேடிய மக்களால் நிராகரிக்கப்பட்டது இது ஆங்கிலேயக் கனேடியர்கள் - பிரான்சுக் கனேடியர்களுக்கு தீதி வழங்க மாட்டார்கள் என்பதைக் காட்டுவதாக இருக்கின்றதென பூசார்ட் சொல்லியிருக்கிறார்.

மீச் லேக், சாலட் டவுன் ஒப்பந்தங்கள் மூலம் 1982ம் ஆண்டு நடைமுறைக்கு வந்த அரசியல் யாப்பிற்கு, ஒப்புதல் வழங்க மறுத்த கியூபெக் மாகாணமக்களுக்கு உரிமைகள் வழங்க வழி செய்யப்பட்டது. குறிப்பாக பிரான்ச மொழிபேசுகின்ற ஒரு தனித்துவமான சமூகம் (A Distinct society) என அரசியல் யாப்பில் வரையறை செய்யப்பட இந்த ஒப்பந்தங்கள் வழிசெய் தது.

கனடாவின் மொத்த மக்கள் தொகையில் (2கோடி 60 இலட்சம்) 26 வீதம் பிரான்ச மக்கள் ஆவர். கியூபெக் மாகாணத்திற்கு வெளியே மட்டும் 10 இலட்சம் பிரான்சுக்காரர்கள் குடியிருக்கி றார்கள்.

கனேடிய அரசியல் யாப்பு இணைப்பாட்சியை அடிப்படையாகக் கொண்டது. ஆங்கிலமும், பிரஞ்சும் ஆட்சி மொழியாக அரசியல் யாப்பில் ஏற்கப்பட்டிருக்கிறது.

மத்திய அரசு மட்டத்தில் ஒரு பிரன்சுக் குடிமகன், பிரன்ச மொழியில் சேவைகளைப் பெற் றுக்கொள்ளமுடியும்.

கியூபெக் மாகாண மக்களுக்கு தனிப் பாராளுமன்றம் இருக்கி றது. தனி நீதி நிர்வாகம், காவல்துறை, சுகவரவு இருக் கிறது. வேறுவிதமாகச் சொன் னால் பாதுகாப்பு, வெளியுறவு, போக்குவரத்து போன்றவை நீங் கலாக சகல அதிகாரங்களும் கியூபெக் மாகாண பாராளுமன் றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டிருக் கிறது.

ஒன்ராரியோ மாகாண மட்டத் தில் பிரன்ச மொழிக்கும் சம உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இதே நேரத்தில் கியூபெக் மாகாண மட்டத்தில் ஆங்கில மொழி உபயோகம் மட்டுப்படுத் தப்பட்டு தனி பிரன்ச மொழி கோலோச்சுகிறது.

கனேடியப் பாராளுமன்றத்தில் கியூபெக் மாகாணத்துக்கு 25 வீத

—நக்கீரன்—

பிரதிநிதித்துவம் இருக்கிறது. அதாவது மொத்தம் 295 ஆசனங்களில் 75 ஆசனங்கள் கியூபெக் மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள் ளது.

அண்மைக்காலங்களில் பிரன்சுக் கனேடியர்கள் அல்லது கியூபெக் மாகாணத்தை வதிவிடமாகக் கொண்டவர்கள் மட்டுமே பிரத மர் பதவியை வகித்து வந்திருக் கிறார்கள்.

இப்போது கூட, பிரதமராகப் பதவி ஏற்கப்போகும் லிபரல் கட் சித்தலைவர் போல் மார்ச்சியன் (Jean Chretien) அசல் கியூபெக் பிரான்சுக்காரர். போதாக்கு றைக்கு எதிர்க்கட்சித் தலைவ ரும் கலப்படமற்ற கியூபெக் பிரான்சுக்காரர்.

இவற்றையெல்லாம் படிக்கும் போதும், பார்க்கும் போதும் பிரன்சுக் கனேடியர் மீது பொறாமை வருகிறது. பின் வாதா என்ன?

பிரன்சுக் கனேடியர்களோடு எழுத்தாளர்களை ஒப்பிட்டுப் பார்ப்பது, மலைகளைத் தடி வைகளைத் ஒப்பிடுவது போன் றது.

பிரன்சுக் கனேடியர்களுக்கு இணைப்பாட்சி அரசியலைப்பின் கீழ், பெரும்பான்மை அதிகாரம் படைத்த கனேடிய அரசுக்குமேல் எங்கே ஆங்கில வெள்ளத்தில் காலகதியில் மூழ்கி விடுவோமா என்ற பயத்தில் தனி நாடு கேட் கிறார்கள். தங்களது தலைவி தினைத் தாங்களே முழுதாக, எந்தவிதத் தடைகளுமின்றி நிர் ணயிக்க ஆசைப்படுகிறார்கள்.

நேரடி வாக்கெடுப்பில், பெரும் பான்மை பிரன்ச மக்கள் (51 வீதம்) கியூபெக் சுதந்திரத்தை ஆதரிக்கும் பட்சத்தில் எந்தவி தமான கோதாபத்திற்கும், மன வேற்றுமைக்கும் இடம் வைக் காமல் பாகப்பிரிவினைக்கு ஆங் கிலக் கனேடியர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள். கியூபெக் நாட் டின் சுதந்திரம் துப்பாக்கி முனையில் அல்லாது வாக்குப் பெட்டி மூலம் கிடைத்துவிடும் நிதர்சன உண்மையை அரசியல் நாகரீகம்.

நூறிண்டவசமாக சிறிலங்கா வின் சிங்களப் பேரினவாதி கள், அரசியல் நாகரீகம் பற் றிப் பேசினால் 'லிலோ' என்ன விலை என்று கேட்கிறார்கள்.

முழு இலங்கையும் பௌத்த சிங்களவர்களுக்குச் சொந்தம் என்கிறார்கள்.

புத்த பெருமான், பௌத்த தர் மத்தைப் பாதுகாத்துப் பேணும் பொறுப்பை, சிறிலங்காச் சிங் களவர்களிடம் வைத்துவிட்டுக் **கண்ணை மூடினார் என்று கதையளக்கிறார்கள்.**

தமிழர்கள் வந்தேறு குடிகள், தமிழ் நாட்டிலிருந்து படையெ டுத்து வந்தவர்கள். அவர்களுக் குத் தனிநாடும் தனியரசும் இருந்ததில்லை என்று சரித்திரத் தைத் திரிக்கிறார்கள். தூட் கைமுறு காலம் தொட்டு சிங்கள அரசர்கள் எல்லோரும் ஒரு குடையின் கீழ், இலங்கை முழுவதையும் ஆண்டு அழகு விதி வந்ததாக புதிய வரலாறு எழுதப்பார்க்கிறார்கள்.

யாழ்ப்பாண இராச்சியம் 13ம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் 17ம் நூற்றாண்டு வரை போர்த்துக்கேயர் யுத்தமுனையில் வெற்றிகொள்ளும் வரை 4 நூற்றாண்டுகள் மேற்கே நினைத்திருந்து கிழக்கே திருக்கோவிலை ராட்சியத்தைப்பரப்படுத்த வில்லை.

யாழ்ப்பாண இராச்சியம் 13ம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் 17ம் நூற்றாண்டுவரை போர்த்துக் கேயரால் புத்த முனையில் வெற் றிகொள்ளும் வரை, நான்கு நூற் றாண்டுகள் நிலைத்திருக்கிறது. மேற்கே சிலாபம் தொடங்கி, கிழக்கே திருக்கோவில்வரை யாழ்ப்பாண இராட்சியம் விரித் திருந்தது யாழ்ப்பாண இராட் சியத்தை ஆண்ட மன்னர்களது பட்டியல் இதோ -

விஜயகூபக்க (சர்க்கரவர்த்தி)	செகராசசேகரன்
குலசேகர (சிங்கையாரியன்)	பரராசசேகரன்
குலோத்துங்க (சிங்கையாரியன்)	செகராசசேகரன்
விக்கிரம (சிங்கையாரியன்)	பரராசசேகரன்
வரோதய (சிங்கையாரியன்)	செகராசசேகரன்
மார்த்தாண்ட (சிங்கையாரியன்)	பரராசசேகரன்
குணபூசண (சிங்கையாரியன்)	செகராசசேகரன்
வரோதய (சிங்கையாரியன்)	பரராசசேகரன்
ஜெயவீர (சிங்கையாரியன்)	செகராசசேகரன்
குணவீர (சிங்கையாரியன்)	பரராசசேகரன்
கனகசூரிய (சிங்கையாரியன்)	செகராசசேகரன்

செண்பகப் பெருமான் வரகு மீண்டும் கனகசூரிய சிங்கையா ரியன் ஆட்சி பீடம் அமர்தல்.

சங்கிலி I செகராசசேகரன்
புவிராஜபண்டாரம் பரராசசேகரன்
காசிநயினான் செகராசசேகரன்
பெரியபிள்ளை செகராசசேகரன்
புவிராஜ பண்டாரம் பரராசசேகரன்
எதிர்மன்னசிங்கன் செகராசசேகரன்
சங்கிலியராசன் (சங்கிலி2) பரராசசேகரன்

இருநூறு வருடங்கள் மட்டுப் வரலாறு உடைய கியூபெக் சுதந் திர நாட்டை பலமில்லாத ஆனால் பல்லாயிரம் தமிழீழத்துக்கு மட்டும் அந்த ஆசை இருக் காதா? இருக்கக் கூடாதா?

நன்றி
உலகத்தமிழர்



போர் உலா



☆ கப்டன் மலரவன்

☆ வெளியீடு: விடுதலைப் புலிகள்
வெளியீட்டுப்பிரிவு
தமிழீழம்

"1990 கார்த்திகை 9 ஆம் திகதி பனிக்காற்று, மெ என வேகமாக வீசி அடித்துக் கொண்டிருந்தது. பால்போலத் தெறித்த வெண்ணிலவை முகில் கூட்டங்கள் வெட்டியோடின" என்று அந்த புதனாய்த் தொடங்கும் "போர் உலா'வுக்குப் பின்னே ஓர் ஆழ்ந்த வேதனை இருக்கிறது.

"கலைக்குப் பின்னால் எப்போதும் இருப்பது மன நெருக்கடி. இருப்புக்கும் எதிர்பார்ப்புக்கும் உள்ள மோதல்" என்று சந்தர ராமசாமி கூறுவார்.

"எந்தச் சிருஷ்டியும் வேதனையில் இருந்துதான் பிறக்கிறது. அந்த வேதனை தான் அந்தக் கலைச்சிருஷ்டியின் ஆனந்தமாகப் பரிமளிக்கிறது" என்பார் ந. சிதம்பர சுப்பிரமணியம்.

தமிழன் எப்படி இருக்க வேண்டும் என்ற மரவனின் எதிர் பார்ப்புக்கும் அவன் எப்படி இருக்கிறான் என்ற இருப்புக்கும் இடையில் உள்ள முரண்தான் இந்த இலக்கியத்தின் அடி நாதம். இதனைப் படித்து முடிக்கிறபோது வாசகனின் உள்ளத்திலும் ஓர் ஆழ்ந்த வேதனை ஏற்படுகிறது. "இதைப் போல அல்லது இதை விட மேன்மையாக இன்னும் ஓர் இலக்கியத்தைப் படைக்க மலரவன் எங்கள் மத்தியில் இல்லை" என்ற சோகமே அது!

போர் உலாவின் அட்டைப்படமும் நூல் கட்டமைப்பும் சிறப்பாக இருக்கின்றன. ஒரு போராளியின் சிருடைப்பின்னணியில் வெள்ளை நிறமாகப் போடப்பட்டிருக்கும் அவனுடைய நிழல், அவனது தூய சித்தனைக்கும் அறப்போருக்கும் குறியீடாக நிற்கிறது. வசியற்ற ஓர் இடத்தில் அவன் குந்தியிருந்து எழுதுகிறான். அவனுக்கு முன்னும் பின்னும் ஒழுங்கற்று நிற்கும் இரு கோடுகள் அவனுடைய கல்மடமான வாழ்நிலைக்குக் குறியீடுகள் போலும்.

போராட்டம் என்று போனால், சாப்பிடாமல் இருக்க வேண்டி வரும். பிகபிகத்த பாலை சாப்பிடாநேரும். நல்ல குளிரில் ஒரு பாதிச்சாக்கில் படுத்துறங்கும்படி ஆகும். குடம்பிகள் மிதக்கும் நீரைக் குடிக்கநேரிடலாம். கடல் நீரில் தேநீர்வைத்துக் குடிக்கவேண்டி ஏற்படலாம். அத்தகைய துன்பத்துக்குள், மலரவன் ஏன் தன்னை இணைத்துக் கொண்டான்?

உணர்வுகளுக்கான காரணங்களைக் கண்டறியலாம். இலட்சியங்களுக்கான காரணங்களை விளக்குவது மிகக் கடினமானது. மலரவன் ஏன் தன்னை இணைத்துக் கொண்டிருந்த இலட்சியம் புனிதமான ஒன்று!

மாங்குளம் இராணுவமுகாம் தகர்ப்பு என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வே இந்த நூலின் கருப்பொருள். போர் நிகழ்வு ஒன்றைச் சொல்லுவதற்கு மலரவன் கையாளும் மொழி அற்புதமாய் இருக்கிறது. கவித்துவ ஆற்றலும், விஞ்ஞான அறிவும், போர்ச் சூழலை விபரிக்கும் நிறமையும் கலந்த ஒரு மொழி.

"தூரத்தில் நாகார்ஜுன் பாலம் பெரிய மிருகம்போலக் குத்தியிருந்தது"; "வேகமாய் வந்த முகில் கூட்டம் கண்ணைக் கசக்கி இரண்டு துளி நீரைச் சிந்தியது"; "அருவி பாய்கிறதா? அன்பு பாய்கிறதா தெரியவில்லை"; "இரும்புச் சளியுக்குள் அகப்பட்ட தோழன்"; மஞ்சளாய் உருகி உருகி அழுதது" என்று சொல்லும் இடங்களில் மலரவனின் கவித்துவத்திறத்தினை நாம் தரிசிக்கிறோம்.

"ஒரு வெள்ளி பால்வெளியில் ஒடி மறைந்தது" "அது வெள்ளியில்லை; ஆகாயக்கல்" -போன்ற இடங்கள் அவனுடைய விஞ்ஞானத் தெளிவைப் புலப்படுத்துகின்றன.

"கண்டாணெண்டால் புக்கை தான், பொட்டு வைத்திருப்பான்" என்று அவன் பாவிக்கும் போது, போராளிகள் இடையே உலவும் மண்வாசனை மூக்கில் அடிக்கிறது. "வசந்தன் ரி.56 ஐத் தடவியபடி...", "அஞ்சிஞ்சி குந்தியிருப்பான்" போன்ற பிரயோகங்கள் போர் அறிவு உள்ளவர்களால் மட்டுமே முழுமையாகப் புரிந்துகொள்ளத்தக்கவை.

நூலின் பல்வேறு இடங்கள் மலரவனின் மன அழுத்தத்தை விரிவாகக் கூறுகின்றன. நாம் கள் மிகவும் பதற்றப்பட்டிருக்கக் கூடிய ஒரு காயத்தைப் பற்றி, அவன் மிக எளிமையாய் "முழங்காலுக்குக் கீழ் கொஞ்சம் தசை காணாமல் போய் இருந்தது" என்பான். எந்த ஒரு மனிதனுக்கும் ஒரு பதகளிப்பை ஏற்படுத்தக்கூடிய இந்தச் சண்டையில், மலரவன் எந்த ஒரு கணத்திலும் அச்சம் கொண்டவனாகத் தென்பட வில்லை. சரியாக இரவு 7.00 மணிக்குத் தாக்குதல் ஆரம்பமாகிறது. 6.53 இற்கு "மச்சான் எல்லாம் 'செற்அப்' பண்ணி பார்சோ?" என்ற கேள்வி எழுகிறது. அந்த நெருக்கீடு நிறைந்த கணத்திற்கு ஒரு நிமிடங்களுக்கு முன் இயற்கையை மிக நுணுக்கமாக அவதானித்திருக்கிறான் அவன். அதனால் அவன் எழுதுகிறான் - "திசை தப்பிய கொக்கு ஒன்று வேகமாகக் கடந்து போயிற்று. அது சாமியார் குளத்துக்குச் சென்றிருக்க வேண்டும் என எண்ணிக் கொண்டேன்".

இந்தக் கொக்கைப்பற்றி 6.50 இற்கு நினைத்துக் கொள்கிறவன், எவ்வளவு உளச்சமநிலை உள்ளவனாய் இருக்க வேண்டும்? இந்த அச்சமின்மை எப்படி வருகிறது? "உச்சி மீது வானிடிந்து வீழ்கின்ற போதிலும் அச்ச மென்பதில்லை" என்கிறான் பாரதி. "எனக்கு சாவைக் கண்டால் சிரிப்பு வரும்" என்கிறான் பாரதிதாசன். அதில் அச்சத்துக்கு இடமில்லை" என்பார் சேக்ஸ்பியர்.

சிங்கள இராணுவம் அப்பாவித் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்ட அகோரமான சித்திரவதைக் காட்சிகள் சில காலப் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் எவ்வளவு கனதியான விசயங்கள் சொல்லப்படுகிற போதும் நூலின் ஊடே மிக மெல்லிய நகைச்சுவை இழை ஒன்று ஓடுவது அழகாய் உள்ளது. "சந்தோசமாய் இருப்பது உலகில் மிகக் கடினமான விடயம்" என்று நீதேயில் பிராண்டன் கூறுவார். "மனைக்கும் ஆளுக்கும் கொஞ்சம் கூட வித்தியாசமில்லை" என்று எழுதுகிறபோதும், ஒருவனுக்கு 'நாற்பதாம் நம்பர்' என்று பட்டம் வைத்து, நாற்பதாம் நம்பர் குத்தியிருந்தது என்கிற போதும், இவை போன்ற இன்னும் பல வேளைகளிலும் இந்த மென்மை உணர்வு மேலே வருகிறது.

மலரவனின் பார்வை மிக நுணுக்கமானது. அவதானம் மிக்கது. அது ஒரு சிறந்த எழுத்தாளனுக்குரிய 'ஒரு விஞ்ஞானிக்குரிய' பார்வை. ஒரு மரத்தின் அமைப்பைக் கருகி இருக்க, மற்றொரு புறம் துளிர் இருந்ததையும், அதன் அருகில் எரிந்த சாம்பல் மேட்டில் சில புல்கள் துளிர் விட்டிருப்பதையும் அவன் ஒரு இடத்தில் விபரிக்கிறான். தமிழினத்தின் ஒரு பகுதி அழித்தாலும், மற்றப்பகுதியில் துளிர் தோன்றுவதைத் தடுக்க முடியாது என்பதையும், முழுவதையும் எரித்துச் சாம்பல் மேடு ஆக்கினாலும் அதன் மேலும் மீண்டும் எழுமோம் என்பதையும் இந்தக் காட்சி குறியீடாய் விபரிக்கிறது என்று நினைத்தால் அதன் கலைத்துவம் இன்னும் உயரும்.

'நிலவு ஒரு முறை அழுதது' என்று எழுதப்பட்டது கூடப் பின்னால் வரும் உயிர் இழப்புகளுக்கான குறியீடாக இருக்கலாம். "நட்சத்திரங்கள் அலகொன்றும் இல்லாமலாய்த் தூங்கித் தூங்கி வழிந்து கொண்டிருந்தன" என்பதை வாசிக்கும்போது, இது போன்ற தாக்குதல் நடவடிக்கைகளில் போராளிகள் தூங்குவதில்லை என்பது நினைவு வராமல் போகாது.

உயர்கல்வி கற்பதற்கான திறமையும் தகுதியும் வாய்ந்த மலரவன், ஒரு தூவி போல் அதனை விடுத்து இயக்கத்திற்குள் நுழைந்தான். ஆனால் கல்வி பற்றிய அவன் கருத்து என்ன? அவன் எழுதுகிறான் பாருங்கள்;

"மாங்குளம் மகாவித்தியாலயம் புன்னகைக்கிடந்தது. ஓ.. இனிய தம்பி தங்கைகளே! எங்கே சென்றீர்கள்? உங்கள் கல்வித்தாலை விட்டு...!"

ஒருவனுக்குள்ள உறவுகளில் நெருக்கமானது தாய் உறவு. மலரவன் கல்வியைத் தாயுடன் உவமை செய்கிறான்.

மாங்குளத்தில் இராணுவம் புலிகளுடன் மோதப்போகிறது. இந்தப் போரில் அல்லது மொத்தமாகவே இப்போது நடைபெறும் ஈழப்போரில் யார் வெற்றி பெறுவர்? இந்த வினாவுக்கு விடை சொல்ல, இராணுவத்துக்கும் புலிகளுக்குமுள்ள அடிப்படை வேறுபாடுகள் சிலவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கட்டுப்பாடும் ஒழுங்குமற்றது இராணுவம் என்ற செய்தியை இந்த நூல் மிகத் தெளிவாகவே எடுத்துக் காட்டுகிறது. 'துவக்கில் லாதவனிடம் வீரம் காட்டும் வாதவனிடம் வீரம் காட்டும் வாதவனிடம் வீரம் காட்டும் வ

பூநகரி இராணுவ ...

பொதுநலநாடுகள் படிப்பக இயக்குனர்.

பொதுநலநாடுகள் படிப்பக இயக்குனர், லண்டனில் வைத்து பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் "சிறீலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள இப் பலத்த பின்னடைவு, சிறீலங்கா அரசாங்கத்தின் இராணுவத்தின் மூலம் தீர்வு என்ற கொள்கைக்குக் கிடைத்துள்ள பலத்த அடி. இனிமேல் இராணுவத்தின் மூலம் தீர்வு என்பது சாத்தியமாகாது. தமிழீழ விடுதலைப் புலிகள், மிக ஆற்றலுள்ள சிறீலங்கா இராணுவத்திற்குச் சரி சமனான படையாகிவிட்டனர். சிறீலங்கா இராணுவத்திடம் ஒழுங்கு இல்லை; உள ஆற்றல் மிகக் குறைவு; தீவிரப் போக்கு உண்டு. ஆனால் புலிகள் கட்டுக் கோப்பான ஒழுங்கான படையணி. கெரில்லா யுத்தத்திலிருந்து மரபுரீதியான இராணுவ அமைப்பாக, சிறப்பான முறையில் பரிணாமம் பெற்று வருகின்றனர். சிறீலங்காவின் இன்றைய ஜனாதிபதி தற்காலிக நிலையில் நியமிக்கப்பட்டவர். அவரால் ஆற்றலுள்ள முறையில் ஒரு பேச்சுவார்த்தையில் ஈடுபடக் கூடிய சக்தி, சாணக்கியம் உண்டா எனக் கூறமுடியாது. அதேவேளை, புலிகள் மிகத் தெளிவான நோக்கைக் கொண்டிருப்பவர்கள். தேவைவந்த முறையில் வாக்குறுதிகளை அளிக்கக் கூடியவர்கள் அல்ல. இத்நிலையில், தமிழர்கள் பக்கத்திலேயே, யுத்தத்தைத் தவிர்ந்த வேறு வழிகள் மூலம் தீர்வு காண்பதற்குரிய சமிக்ஞைகள் காணப்படுகின்றன. இதனை சிறீலங்கா பயன்படுத்த வேண்டும். இனியும் இராணுவத் தீர்வுமூலம் தீர்வு காணலானை, சிறீலங்கா ஜனாதிபதி விஜய துங்கா எதிர்பார்க்க முடியாது" எனக் கூறியுள்ளார்.

சிங்களவரிடை விரக்தியுணர்வு.

பூநகரியில் 400க்கும் மேற்பட்ட வர்கள் கொல்லப்பட்டும் மிகுதியான 300 பேர் காணாமல் போயுமுள்ள நிலையில், சிங்களவரிடையே பெரும் அதிருப்தியும், வெறுப்பும் காணப்படுவதாகக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. தங்கள் இளைஞர்கள் அநியாயமாக, அதிகார வெறிக்காக பலியாக்கப்படுவதாகச் சிங்கள மக்கள் பகிரங்கமாக கருத்து வெளியிடத் தொடங்கியுள்ளதைக் காணக் கூடியதாக உள்ளது. எதிர்க்கட்சித் தலைவி பண்டாரநாயக்காவும் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய நிலை உள்ளது எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

'லைட் இன்பான்ட்ரி' அணி சிதறியது

பூநகரியில் நிலைகொண்டிருந்த சிறீலங்காவின் 'லைட் இன் பான்ட்ரி' அணி முற்றாகச் சிதறடிக்கப்பட்டதால், அவ்வணியில் இருந்தவர்களில் பெரும் பான்மையோர் பலியானதாகத் தெரியவருகிறது. வானிலிருந்து விமான ஒட்டிகள் அனுப்பிய தகவலின்படி, முகாமைச் சுற்றி வெங்கும் இறந்த இராணுவத்தினரின் சடலங்கள் சிதறிக் கிடப்பதாக அறிவித்தனர். அத்துடன், தங்களால் அப்பிரதேசத்தில் இறங்க முடியாதுள்ளதாகவும் அறிவித்தனர்.

ஆயுதங்களுடன் மீண்டனர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அணிகள், 120 மி.மீ. ஆட்ட மிகு மோட்டார்கள், வாட்டர் ஜெட் படகுகள், T55, T85 செக். தாங்கிகள் உட்பட சுமார் 30 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களுடன் தங்கள் தளங்களுக்குப் பாதுகாப்பாகத் திரும்பினர். இராணுவ, கடற்படைத் தளங்களின் கட்டடங்கள் தகர்க்கப்பட்ட பின்னரே தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றுகையைக் கைவிடு திருப்பியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதன் பின்னரே சிறீலங்கா இராணுவம், சிறீலங்கா ஜனாதிபதியின் நேரடிப் பணிப்பில் தனது "துணிவான பேய்களின் மீட்புப் பணி" (Dare Devil Rescue Operation) என்று பெயரிட்ட மீட்புப் பணியை ஆரம்பித்தனர். 540 படையினரே காயங்களுடன் மீட்கப்பட்டனர். மொத்தமாக எண்ணூறுக்கும் உட்பட்ட படையினரே மீட்கப்பட்டுள்ளதால் இரண்டாயிரம் பேரைக் கொண்டிருந்த இக் கூட்டுமுகாமில் இருந்த மிகுதிப் படையினர் கொல்லப்பட்டோ அல்லது விடுதலைப் புலிகளால் கைதாக்கப்பட்டோ இருக்க வேண்டுமென இராணுவத் தலைமையகம் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறது.

ஆயினும் சிறீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "புலிகளிடம் ஆயுதங்களை இழந்தோம். எமது தரப்பில் பல உயிர்களை இழந்தோம். ஆனால் பூநகரி முகாமை நாம் இழக்கவில்லை" எனப் பாராளுமன்றத்தில் பேசியுள்ளார். மக்கள் யாருமற்ற வெண்மணற் பரப்பில், புலிகள் கைவிட்ட பிரதேசத்தில் சிறீலங்காப் பிரதமரின் படகள் நிற்கின்றன என்பதை மறந்து உண்மைக்கு மாறான தகவலை சிறீலங்காப் பிரதமர் வெளியிட்டுள்ளார்.

யாழ் நகரில் உடல்கள் எரிப்பு

செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் முன்னிலையிலும், யாழ் அரசாங்க அதிபரின் முன்னிலையிலும், விடுதலைப் புலிகளால் சேகரிக்கப்பட்ட சிறீலங்காப் படையினரின் சடலங்கள் எரிக்கப்பட்டன. முன்னர் இச்சடலங்களை செஞ்சிலுவைச் சங்க மூலமாக சிறீலங்காவிடம் கையளிக்க புலிகள் விரும்பிய போதும் உடல்கள் சிதைந்து அழுகிக் காணப்பட்டதால் அவைகள் எரிக்கப்பட்டு சாம்பல்கள் செஞ் சிலுவைச் சங்கம் மூலமாக உரியவர்களிடம் கையளிக்க ஏற் பாடாகியுள்ளது.

தேவாலயத்தில் ஒன்பது பேர் பலி

சிறீலங்கா விமானப்படை மேற் கொண்டுவரும் கண்மூடித்தன மான குண்டுவீச்சுக்களால் யாழ் குடாநாட்டில் பெரும்பாலான தேவாலயங்கள் உட்பட பலத்த சேதம் ஏற்பட்டு வருகின்றது. தேவாலயக் குண்டு வீச்சில் 9 பேர் பலியானதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கோப்பாய், சாவகச்சேரி பகுதிகளில் குண்டு வீச்சு கடுமையாக நடைபெற்றுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ■

விடுதலைப் புலி...

இறுதியாக யாழ்தேவி நடவடிக்கை என்ற பெயரில் தரை நகர்வு யுத்தத்தைத் தொடங்கி பலத்த இழப்புகளுக்குப் பின் தம் முகாமிற்கே திரும்பின. இத்தப் பின்னடைவுச் சிறீலங்கா இராணுவத்தின் கையாலாகாத் தனத்தையும், ஒரு அங்குல நிலத்தைக் கூட தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க இயலாத் தன்மையையும் உலகுக்கு உணர்த்தி நிற்கு.

சக்தியாக உரு ...

தோம். இன்று நாடின்றி, வீடின்றி, யாருமற்றோர் 'பாவம்' என்னும் சொல்லான 'அகதி'க்குப் பொருளாக உலகெல்லாம் வலம் வருகின்றோம். தன்னாடு தளருதெனில் தன்னுயிரும் தாங்காத கவரிமான் பரம் பரையாய் அவர்கள். தமிழினத்தின் அவமானங்களாய் இரவலர்களும் கேவலமாய், மாற்றான் பார்வையில் வாழ்கின்றோம். இது தகுமா?

! நாம் எம்மையே ஏமாற்ற முடியாது. நமக்கொரு நாடு வேண்டும். அது நம் இனம் வாழும் நாடாக இருக்க வேண்டும். நம் மழத்திரு நாடாக திகழவேண்டும். தமிழீழ மண் மீது நம் சந்ததிகள் சுதந்திர மாய்ச் சென்றடைய வேண்டும். அவர்பட்ட துன்பத்தில் பிறப்பெடுக்கத் துடிக்கின்றது தமிழீழம். அவரோடு தோள்தின்று, துன்பம் ஏற்காது தப்பி ஓடி வந்துவிட்டோம் எனும் துயர் நம்மைக் குடைந்தாலும் ஒன்று செய்யலாம். அவர் தம் தமிழீழப் பிரசவ வேதனையைத் தேர்த்தையும் குறைக்கும் பணியை நிறையச் செய்யலாம். இன்றே இணைவோம். உலகெல்லாம் பரந்து நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவு அமைப்புக்களுடன் அணியணியாய் பணி செய்யப் புறப்படுவோம். தம்முயிரே தந்து தமிழ் காக்கும், தமிழீழம் காக்கும் புனிதர்கள் நடாத்தும் புனிதப் போருக்குப் பக்கத் துணைநிற்போம். அவர்கள் அமைதியைத் தேடுகின்றார்கள். அமைதியைக் குலைக்கவில்லை. அமைதியைப் பறிப்பவன் அடக்க முடிச் சில்களைப் பேரினவாதியே என்பதை சரத்பொன்சேகாவே... எனவே தமிழீழம் பிரத்தியேகமாகப் பிரார்த்தனை மேற்கொள்ளும் அவை மாமன்றத்தில் காலடி வைக்கும். இந்த வெற்றிக்கான உந்து சக்தியாம் 'சக்தி' மேடையை தந்த மாவீரர்கள் தான் மாவீரர்கள். அவர்கள் நம் வாழ்வை தமிழீழச் சக்தியாக உருமாற்றினார்கள். அவர்கள் தந்த சக்தியில், தரு கின்ற சக்தியில், தமிழீழ அன்னை விடுதலைக் கொடியாம் தமிழீழத் தேசியக் கொடியை கையில் ஏந்தி, உலக வரைபடத்தில் உறுதி பெற நாம் அனைவரும் உறுதிபூண்டு உலகுய்ய தோன்றே மாவீரருக்கு நாம் செய்யக் கூடிய கைமாறு தன்நிகரில்லாத் தேசத்தை மீளவும் வாழ்வு மேற்றும்பணி வாழ்க தமிழீழம் என்னும் வாழ்வே பின்னர் ■

வாழ்தேவி....

நாக்குதல் பிரிவின் திறன் வெளிப்படுத்தப்பட்டுள்ளதோடு, மோட்டார் தாக்குதல் பிரிவின் கடும் சக்தியும் அதிகரித்துள்ளது என்பது வெளிவந்துள்ளது. அதாவது அரை மணி நேரத்துக்குள் 160 துருப்பை காயப்படுத்தும் அளவுக்குப் புலிகளின் மோட்டோர் கடும் பலம் உள்ளது வெளிக்காட்டப்பட்டது. இத்தி லையானது. இராணுவம் கிளாயில் நடித்து நிற்பது என்பது அதற்குப் பெரும் சேதத்தை ஏற் படுத்தக் கூடியதாகவே இருக்கும் என்பது இராணுவத்தால் சரியாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது போல் தெரிகின்றது.

மேலும் ஆரம்பமாகும் மாரிப் பருவத்தில், கிளாயில் நரித்திருக்கும்போது விமானப்படையின் பூரண ஒத்துழைப்பு ஒன்றை எதிர்பார்க்க முடியாது என்பதோடு, இப்படித்தில் நிறைந்துள்ள தென்னந்தோப்புகள், விமானப்படையின் தாக்குதல் இலக்குகளை மறைத்து விடுவதாகவும், போராளிகளுக்கு பாதுகாப்பு அரணாகவும் உள்ளன அதாவது, தென்னந்தோப்புகள் இயற்கையான காப்புகள் போன்று விமானப் படையினருக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் அதேவேளை, போரிடும் புலிகளுக்கு பாதுகாப்பு அரணாகவும் உள்ளமை ஒப்பீசன் யாழ்தேவியின் மேதை ஓளரப்பட்டன.

இவ்வாறான மதிப்பீடுகளின் அடிப்படையிலும்தான், கிளாயில் இருந்து இராணுவம் வாபஸ் பெறப்பட்டுள்ளது. அதாவது இப் பின்வாங்கல், விடுதலைப் புலிகள் தாக்குதல் களைத் தீவிரமாக்கலாம் என்ற அச்சத்தினால் எழுந்தமானமாகி சந்தர்ப்பங்களில் இந்த வேளை புலேப்பனைச் சுற்றி முலம் சிங்கள இராணுவம் திரு விடுதலைப் புலிகள் மேற்கொண்டுள்ள படை தாக்குதல் 'சன்சே இலங்கை' இல் வந்த மொன்றில் மிகவும் தெளிவாகக் கூடிய காட்டியி ராச் 'விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்குள் நுழைந்தால் மரணமே' என்பதே அதன் ■

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamil Eelam Archive

நிகழ்வும் நினை ...

நாகதேவன்துறை 'பூநகரி' எனத் தோல்விகளையே சிறீலங்காப் படையினர் சந்தித்து வருகின்றனர். இது சிறீலங்கா அரசில் ஒரு ஆட்டத்தினை ஏற்படுத்தும். ஆனால், 'யாழ்தேவி நடவடிக்கை' வரையிருந்த நிலைமைகளுக்கும், தற்போதைய நாகதேவன்துறை 'பூநகரித் தாக்குதலின்' பின் ஏற்பட்டுள்ள நிலைமைகளுக்கும் இடையில் ஒரு வேறுபாடு உள்ளது. 'யாழ் தேவி' வரை தமது வெற்றி குறித்து நம்பிக்கை கொண்டிருந்த பெரும்பான்மை சிங்கள மக்களின் மனோபலம் கொடுத்து வெற்றிகளைச் சம்பாதிப்பது இலகுவானதாக இருக்கவாட்டாது. படையினருக்கு இன்னெதியினை மேலும் திட்டமிட்டு ஊட்டுவதன் மூலம், மனோபலத்தினை ஏற்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படலாம்.

இன்று தேவை, தோன்றியுள்ள நிலைமைகளின்படி ஏதாவது திடீர் மாற்றங்கள் ஏற்பட்டாலன்றி, சிறீலங்காப் படையினர் - விடுதலைப் புலிகள் பலப்பரீட்சை யுத்தக் களங்களில் தொடரும். விடுதலைப் புலிகளை அழித்தல் என்ற பெயரில் தமிழீழ மக்கள் மீதான கொடூர ஒடுக்குமுறைகள் தீவிரமடையும். ஏதாவது சமதான முயற்சி, எவராலாவது மேற்கொள்ளப்படின் அது சிறீலங்கா அரச தரப்பினால் நிராகரிக்கப்படும். சர்வதேச முயற்சிகள், 'இது உள் ளாநாட்டுப் பிரச்சினை' என்று கூறிப் புறந்தள்ளப்படும். பாரிய இராணுவ வெற்றிகளைச் சம்பாதிப்பதற்கு சிங்கள பௌத்த இனவாதம் துடியாய்த் துடிக்கும். அதேவேளை, சிங்கள பௌத்த இனவாதத்திற்கு பலத்த அடியினைக் கொடுத்து, அதனை முறியடிக்க தமிழீழ மக்கள் தற் காப்பு யுத்தத்திற்குத் தம்மைத் தயார்படுத்திக் கொள்வர். சிறீலங்காப் படையினர் தொடர்ந்தும் பலத்த அடியினை தமிழீழ மக்களின் முன்னணிப் படையிடம் இருந்து வாங்குவர். பொதுரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் சிங்களத் தமிழ்த் தேசங்கள் மேலும் பிளவுபட்டுப் போகும்.

இலங்கைத் தீவின் தேசியப் பிரச்சினைக்கு சிங்கள, தமிழ் தேசங்கள் இரண்டு அரசுகளாக பிரிவதே அமைதியான தீர்வை ஏற்படுத்தும். ஏற்கனவே அரசினை அமைத்து தமது ஆளுமைகளை தமிழ்த் தேசத்தின் மீது செலுத்திக் கொண்டிருக்கும் சிங்கள தேசம் இதனை உணர்ந்து தமிழ்த் தேசம் பிரிந்து சென்று தனி அரசினை அமைப்பதினை அங்கீகரிக்கும் வரை, இப்பிரச்சினை தீரப் போவதில்லை. சிங்கள தேசம் விரும்பியோ, விரும்பாமலோ இதனை அங்கீகரிக்கும் வரை, தமிழீழ மக்களும் ஓயப்போவதில்லை. நாகதேவன்துறை 'பூநகரி' நிலம் வசமும் நிற்கப் போவதுமில்லை. அதனால், போரா? சமாதானமா? என்பது இன்று சிங்கள தேசத்தின் கைகளிலேயே உள்ளது. ■

நேரலாத்தில்
மாவீரர்நாள் – கார்த்திகை 27
27-11-1993
முத்தமிழ் வீர வணக்கவிழா

காலம் - 27-11-1993
நேரம் - மாலை 5.30 மணி
இடம் - REMBRANLANN - 5, SCHAGEN.
T.P. : 02240-12940

தமிழ் சிங்கலை மக்கள் பொலாந்து கிளை

நிகழ்வும் நினைவும்

-தியன்-

"போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்"

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட நாகதேவன்துறை, பூநகரிப் படைத் தளங்கள் மீதான தாக்குதல் தென்னிலங்கையினை அதிர வைத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், சிறி லங்காப் படையினர் எதிர்கொண்ட மிகப் பெரும் தோல்வியாகவும் இது வர்ணிக்கப்படுகின்றது.

ஏறத்தாழ ஆயிரம் படையினர் வரை கொல்லப் பட்டோ அல்லது காணாமல் போயோ உள்ளனர் எனவும், பல கோடி ரூபாய்கள் பெறுமதியான ஆயுத தளபாடங்கள் விடுதலைப் புலிகளால் கைப் பற்றப்பட்டுள்ளன எனவும் செய்திகள் தெரிவிக்கின் றன.

இத்தாக்குதல், சிறீலங்கா இராணுவத்திற்கு இரா ணுவ ரீதியில் ஒரு மிகப் பெரும் தோல்வி என்ப தில் சந்தேகமில்லை. இத்தோல்வியினை இரு வகையாகப் பிரிக்கலாம்.

நாகதேவன்துறை, பூநகரி ஆகியவை வெறும் இராணுவ, கடற்படை முகாம்கள் அல்ல. இவை பெரும் பிரதேசத்தை உள்ளடக்கி அமைக்கப்பட்ட படைத்தளங்கள். ஏறத்தாழ பத்து கிலோ மீற்றர் பிரதேசத்தை உள்ளடக்கிய பகுதியில் பல இரா ணுவ நிலைகளையும், காவலரண்களையும் கொண்டவையாக இவை அமைந்திருந்தன. ஏறத் தாழ 2000 படையினர் வரை இம்முகாம்களில் நிலை கொண்டிருந்தனர். ஆள், ஆயுத ரீதியில் விடுதலைப் புலிகளால் 1991 இல் தாக்குதலுக்குள் ளான ஆனையிறவுப் படைத் தளத்தினைவிடப் பலம் பொருந்தியதாக இப்படைத் தளங்கள் அமைந்திருந்தன.

இத்தகைய, கடற்படை இராணுவத் தளங்கள் மீது தாக்குதல் நடாத்தி, அவற்றைத் தகர்த்தமை மூலம் சிறீலங்கா இராணுவத்தின் போர்த்திறனுக்கு பெரும் சவாலை விடுதலைப் புலிகள் விடுத்துள் ளனர். பெருந்தொகையான ஆள், ஆயுத பலத்தி னைக் கொண்டிருந்தபோதிலும், இத்தளங்களைப் படையினரால் பாதுகாக்க முடியாமல் போனமை, ஏனைய சிறீலங்காப் படையினரின் மனோபலத் தினை மிகவும் பாதித்திருக்கும். பெருந்தொகை யான ஆள், ஆயுத இழப்பு அவர்களை உலுப்பி யிருக்கும். இவை படையினரின் போர் ஆற்றலின் மீது கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தும். படையினர் தரப்பில் ஏற்பட்ட இழப்பினையும், அவ்விழப்பு ஏற்படுத்தக் கூடிய தாக்கங்களையும் சிறீலங்கா ஆயுதப் படையினருக்கு ஏற்பட்ட ஒரு வகைத் தோல்வியாக நோக்கலாம்.

மற்றையது, தென்னிலங்கையில் பெரும் அச்சம் தெரிவிக்கப்படுவதுமான தோல்விபற்றி, இத்தாக்கு தல் மூலம் விடுதலைப் புலிகளின் போர்த்திறனில் ஏற்படக்கூடிய அதிகரிப்பும் ஆகும். இரண்டு தாங்கிகள், நான்கு 120 மி.மீ. மோட்டார்கள், 5 வேட்டர் ஜெட் படகுகள், 11 ஐம்பது கலிபர் துப்பாக்கிகள், நானூறுக்கும் மேற்பட்ட தானியங் கித் துப்பாக்கிகள் உட்பட ஏராளமான ஆயுத தள பாடங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட் டன. இவை 13-11-93 இல் சண்டையினை முடித் துக்கொண்டு, விடுதலைப் புலிகளின் படையணி கள் முற்றாகத் தளம் திரும்புமுன், விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட பத்திரிகை அறிக்கை யில் உள்ளடங்கிய விபரமாகும். நிச்சயமாகக் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் இவற்றைவிட அதி கமாக இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், விடுத லைப் புலிகளின் போர் ஆற்றலை பெரிதும் அதி கரிக்கும் என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின் றனர். ஐந்து மைல் தூரம் வரை சென்று தாக்கக் கூடிய 120 மி.மீ. மோட்டார்கள், ஏனைய படைத் தளங்களின் பாதுகாப்புக்கு ஆபத்தினை ஏற்படுத் தும் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. படைத் தளங்களில் உள்ள விமான ஓடுபாதைகளும், எதிர் காலத்தில் பெரும் சேதத்திற்கு உள்ளாகலாம் என்ற கவலையும் இராணுவ வட்டாரங்களில் ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட வேட்டர் ஜெட் படகுகள், கடற்புலிகளின் இயங்கு திறனில் குறிப்பிடக்கூடிய அதிகரிப்பினை ஏற்படுத்தும். நாகதேவன்துறை, பூநகரிப் படைத் தளங்களின் மீதான தாக்குதலின் போதும், தாக்குதலால் சித றியோடிய படையினரை மீட்பதற்கு சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட முயற்சிகளை முறியடிக் கும் நடவடிக்கையின் போதும், கடற்புலிகளின் பங்கு குறிப்பிடத்தக்களவு இருந்தது. இன்னொரு வகையில் கூறப்போனால், இத்தாக்குதலின் வெற் றிக்கு கடற்புலிகளின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க பங்களிப்பினை ஆற்றியிருந்தது. எனவே, கடற்பு லிகளின் இயங்குதிறனில் ஏற்படக்கூடிய அதிக ரிப்பு, கடல்சார்ந்து அமைத்திருக்கும் படைத் தளங்களின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்ப தாக அமையும் என்ற அச்சம் சிறீலங்காப் படை யினருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், கடல் ரீதியாக ஆள், ஆயுத மற்றும் ஏனைய விநியோகங்களை மேற்கொள்வதனையும் கடற்புலிகளின் வளர்ச்சி எதிர்காலத்தில் பாதிக்கலாம் என்னும் சிறீலங்காப் படைத் தலைமை அஞ்சுகிறது.

இந்த வகையில் தமக்கு ஏற்பட்ட இழப்பினை மட்டுமல்ல, விடுதலைப் புலிகளின் போர்த் திறனில் ஏற்படக்கூடிய அதிகரிப்பினையும், இனிவரு கரிப்பு எதிர்காலத்தில் தமக்கு ஏற்படுத்தக்கூடிய அச்சுறுத்தலையும் சிறீலங்கா இராணுவ வட்டாரங் கள் பெரும் கவலையுடன் ஆய்வு செய்யும் என்பது திண்ணம்.

நாகதேவன்துறை - பூநகரி படைத் தளங்கள் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல், பெரும் அதிர்ச்சியினைத் தென்னிலங்கையில் ஏற்படுத்தி யுள்ளது என ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேன். "விடுதலைப் புலிகள் பலாலித் தளத்தினைத் தாக்குகிறார்கள் என்ற செய்தி எமக்குக் கிடைக்கு முன் அரசாங்கம் ஏதாவது செய்தாக வேண்டும்" என்று கொழும்பிலிருந்து வெளிவரும் 'Sunday Times' தனது 14.11.1993 ஆசிரியர் தலையங்கத் தில் குறிப்பிடும் அளவுக்கு இத்தாக்குதல் அவர் களை அதிர வைத்துள்ளது. சிறீலங்கா ஆயுதப் படையின் மிகப் பெரிய தளமான பலாலிப் படைத் தளத்தின் மீது கூட விடுதலைப் புலிகள் தாக்கு தல் நடாத்தக்கூடியவர்கள் என்ற அச்சத்தினை யும், இத்தாக்குதல் ஏற்படுத்தியுள்ளதை நோக் கும்போது, இராணுவ வெற்றிகள் மூலம் விடுத லைப் புலிகள் தமிழீழத்தினை வென்றெடுக்கக் கூடிய நிலைமைகளை உருவாக்கிவிடுவார்கள் என்ற பயத்தினையும் இத்தாக்குதல் சிங்கள மேலத்த பேரினவாதிகளுக்கு ஏற்படுத்தியிருக்கும் என்றே எண்ணத் தோன்றுகிறது.

எனவே, இத்தாக்குதல் ஏற்படுத்தியிருக்கக் கூடிய அரசியல் தாக்கங்களை நோக்குதலும் இங்கு அவசியமாகிறது. "இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்றில்லை. பயங்கரவாதப் பிரச்சினை தான் உண்டு" என்ற ஜனாதிபதி டி.பி விஜயதுங் காவின் பிரகடனம் வேண்டிநிற்பது, விடுதலைப் புலிகளை முழுமையாக நிர்மூலம் செய்தல் என்ப தனையே. இங்கு விடுதலைப் புலிகளை நிர்மூலம் செய்வது என்பது, வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களை நிர்மூலம் செய்தற் கு ஒப்பாகவே அன்றி வேறல்ல. இங்கு தான் நிர்மூலம் என்ற சொல்லுக்கு முழுமையாகப் பௌதிக ரீதியில் ஒவ்வொரு தமிழரையும் அழித்தொழிப்பது என்ப தல்ல. மாறாகத் தமிழீழ மக்களின் ஆயுத எதிர்ப் புச் சக்தியினை அழித்தல், தனித்துவமான அடையாளங்களை அழித்தல், தேசியத் தலை மையைச் சிதைத்தல் போன்றவற்றை மேற்கொள் வதற்காகச் செய்யப்படவுள்ள திட்டமிட்ட இனப் படுகொலையினையே ஆகும்.

இலங்கையில், 'பயங்கரவாதப் பிரச்சினை' மட்டும் தான் உள்ளது என்றால், அப் 'பயங்கரவாதிகளை'

தொடர்ச்சி 5ம் பக்கம் ....

நோர்வேயில்
மாவீரர் நாள்
அஞ்சலி நிகழ்வும் கலை நிகழ்ச்சிகளும்
BUITEATERSALEN
ROSENKRANTZ GT. 8
28.11.93 ஞாயிறு மாலை 6.00 மணி
நிகழ்ச் சிகள்
அஞ்சலி நிகழ்வு
பாடல்கள் நடனம்
"யாழ்தேவி"
மாவீர் நாள் உரை
Prof. Peter Schalk
"தாயகக் கனவு"

தமிழீழத் தேசியத் தலைவர் தளபதிகளுக்குப் பாராட்டு

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே.பிரபாகரன் அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க பூநகரித் தாக்குதலை மேற்கொண்ட தள பதிகளைச் சந்தித்து பாராட்டுத் தெரிவித்துள்ளார். மேலும் நடந்த இச் சந்திப்பில், முகாம் தாக்குதலை திட்டமிட்டு நடத் திய தளபதிகள், தாக்குதல் அணித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இத்துடன், விடுதலைப் புலி களால் கைப்பற்றப்பட்ட ஆயுதங் கள், தளபாடங்கள் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள் ளன.

இதேவேளை, தமிழீழ தேசி யப்புகைப் விலைமதிப்பற்ற உயிர்களை அர்ப்பணித்துவிட் மாவீர்களைக் கௌரவிக்கும் மாவீர் எழுச்சி நாளுக்கான ஏற் பாடுகளும் தமிழீழப் பகுதி எங் கும் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. எதிர்வரும் 21 ம் திகதி விருந்து 27ம் திகதி வரையான ஒரு வாரம், மாவீர் வாரமாகக் கொண்டாடப்படவுள்ளது. இம் மாவீர் வாரத்தில் தமிழீழப் பகு திகளெங்கும் எழுச்சி விழாக்கள், சிரமதானப் பணிகள், என்பன நடைபெற ஏற்பாடகளுள்ளன.

டென்மார்க்கில்
மாவீரர் தினம்

கார்த்திகை. 27
SØNDERAGERSKOLE
HERNING.



மாவீரர் நாள் – கார்த்திகை 27

கல்லறை தழுவும் காற்றே வருக !
காவிய நாயகர் மூச்சைத் தருக !

கருமேகங்களுடன் கசிந்து, விரிசிந்தும்
கார்த்திகை மாதம்.
நள்ளிரவுப்போதில் நாதனின் சந்நதம்.
கல்லறைக்கு முன்பாக நெய்விளக்குப்பந்தம்.
நெஞ்சந்தனார்வினிலே... நெக்குருகி,
கனகனிலே எங்கும் நீர்க்கோலம்.
"மாவீரர் நாள்"
என்ன
திரும்பத் திரும்பத் நீக்குனிக்கும் நினம்.
"பிடரியில், நட்டி விட்ட அக்கினி
நாளைத் தட்டில் நிறுத்தும் வாக்கினம்"
இப்படி மாற்றான் எனிய நமிழனை
புலியென நினைந்து கிலிகொள வைத்த
பின்னைகள் நினைவில் உருவிடும் நாளிது.
கல்லறை தழுவும் காற்றே வருக!
காவியநாயகர் மூச்சைத் தருக!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T./F 081-470 8898

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark, Tel/Fax
97-841031

T.C.C
P.O.Box 694, Mulgrave North
Victoria 3170, Australia
Tel 03-4578347 F 9608054

T.C.G
Post Fach 340251
51624 Gummersbach-34
Germany

T.C.C
Via Martano Stabile - 34
80139 Palermo, Italy
T./F 091-611 5178

T.C.C
Groot Hertogenreaan 305
2597 IR, Den Haag Nederland
Tel 070-540 0653 F-354 0653

T.C.C
P.O.Box 6893 Vika
0130 Oslo - 1, Norway
Tel 022-551050 F-160114

W.T.C.C
HOFERORLN. 74/6 ROBELS
SWITZERLAND
Tel 077 - 946509

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 43551142 F 43551161

T.C.C
Blekingegatan 29
16263 Spanga, Sweden
Tel 08-7612945

Printed by Observer Group Newspapers.